தென்றல்

வார இதழ்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 25 புதிய காசு | வெளிநாடு 30 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆவணி 27 (12-9-'59), சனிக்கிழமை | இதழ் 13

அண்ணா பொன்விழாச் சிறப்பிதழ்.

குறுங் கவிதை

ஒரே தலைவன்

★

நாடற்றவர் நலமற்றவர்
நடைகெட்டவ ரேனும்
வீடற்றவர் விதியற்றவர்
வீழ்வுற்றவ ரேனும்
பாடற்றவர் பணியற்றவர்
பாழ்பட்ட வரேனும்
ஆடற்றமிழ்த் தாய்பெற்றவர்
ஆயின்இவர் தோழர்!

"கண்ணில்ஒரு புண்வந்தபின்
கண்ணுக்கது பகையே!
எண்ணில்ஒரு கள்ளம்வரின்
எண்ணுக்கது கொலையே!
மண்ணில்ஒரு வஞ்சப்படை
வந்தாள்வது முறையோ?
வண்ணத்தமிழ் மகனே உடன்
வருவாய் சமர்புரிவாய்!"

கொஞ்சுங்குரல் எனினும் அது
குமுறும்குரல் அலவோ?
பஞ்சின்மொழி எனினும் அது
பண்பின்மொழி அலவோ?
துஞ்சுந் தமிழ் பொங்கும்வகை
சொன்னார் அவர் சொன்னார்!
அஞ்சும்பகை அலறும்படி
அண்ணா உரை சொன்னார்!

ஆண்டுக்கொரு புதுமை தரும்
அறிவுத் திருமாறன்
ஆட்சிக்கொரு வழிகூறிடும்
அரசுக் கலைவாணன்!
மீண்டுந்தமிழ் முடிசூடிட
விரையும்படை வீரன்!
மீட்சிக்கென வேல்தாங்கிய
வெற்றித் தமிழ் வேந்தன்!

செம்பொன்மணி யாரத்தொடு
செல்வம் பல தரலாம்
தம்பிப்படை யாவும்பல
தங்கத்திரள் தரலாம்
நம்பிதமிழ் முறைபாடிய
நலமேநிறை அண்ணன்
தெம்புக்கது குறைவே; அவா
திறனுக்கது சிறிதே!

(வேறு)

பொன்விழையா மன்னவனின் பொன்விழாவில்
பூச்சொரிந்து வாழ்த்திடுவோம்! வாழ்க அண்ணா!

—கண்ணதாசன்.

பொதுத் தொண்டு.

★

மக்கள் மன்றப் பொங்கல் விழாவில்
அறிஞர் அண்ணா ஏழையர்க்குக் கஞ்சி வழங்குகிறார்.

நக்கீரர் மன்றத்தின் சார்பில், அண்ணியார்
ஏழைக் குழந்தைகட்கு சிலேட்டுகளும்
புத்தகங்களும் வழங்குகிறார்.
உடன்நிற்பவர் சத்தியவாணிமுத்து அம்மையார்.

படம் உதவியவர்: சிறுவை ந. இனியன்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 | 12—9—'59 | இதழ் 13

இரண்டு கண்கள்; நான்கு லட்சம் கைகள்!

உலகம் முழுவதும் உறங்கிக்கொண்டிருந்தபோது ஒருவன் மட்டும் விழித்துக்கொண்டிருந்தான்.

மனிதர் யாவரும் மயங்கிக் கிடந்தபோது, ஒருவன் மட்டும் தெளிவோடிருந்தான்.

வாழ்வைச் சாவாக்கிக்கொண்டவர்கள் நடுவே, ஒருவன் மட்டும் சாவை வாழ்வாகக் காட்டிக்கொண்டிருந்தான்.

பல்லாயிரம் கல் நிலப்பரப்பை இருள் கவ்விக்கொண்டிருந்தபோது, ஒரே ஒரு விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது.

குழம்பி நாற்றமெடுத்துப்போன ஒரு குட்டையை, ஒரே ஒரு மீன் தூய்மைப்படுத்த முயன்றுகொண்டிருந்தது.

அஞ்சி அஞ்சி மாண்ட மனித குலத்திடையே, ஒரே ஒரு தலை நிமிர்ந்து நின்றது.

ஒளியிழந்துபோன பல்லாயிரம் கண்களுக்கிடையே, இரண்டு கண்கள் பேரொளி வீசிக்கொண்டிருந்தன.

முறிந்துபோய்க்கிடந்த பல்லாயிரம் கால்களுக்கிடையே இரண்டு கால்கள் உறுதியோடு நடந்துகொண்டிருந்தன.

வானத்தை நோக்கி நீண்டுகொண்டிருந்த பல்லாயிரம் கைகளுக்கிடையே இரண்டு கைகள் மனிதனை நோக்கி நீண்டுகொண்டிருந்தன.

சதி நடப்பதறிந்தும் விதியை நம்பிக்கொண்டிருந்தவர்கள், அந்த மனிதனை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

'நீ யார் தெரியுமா ?'-அவன் உரத்த குரலில் கேட்டான்.

'இவன் யார் ?'-அவர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள்.

'பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே, பண்பாடு கண்டவர்கள் நீங்கள்; ஆடை இல்லாத உலகிற்கு, ஆடைதந்தவர்கள் நீங்கள்; உதடு திறந்தறியா மிருகங்களுக்கு, மொழி தந்தவர்கள் நீங்கள்; கடல் அலை கிழித்தது, உங்கள் கலம்; கரை பல கண்டது, உங்கள் இனம்; முத்துக் குளித்த குலம், நீங்கள்; மூவர் நடந்த வழி, நீங்கள்; படை கொண்டுபோனது, உங்கள் பரம்பரை; பண்பாடு வளர்த்தது, உங்கள் தாய்க்குலம்; ஆற்றேட்டப் பாதையை எல்லையாய்க் கண்டவர், உங்களவர்; அடி சருக்காமல் படி ஏறி நின்றவர், உங்கள் மூதாதையர்; கொற்றத்தைக் குடை என்றதும், கோன்முறையைச் செங்கோல் என்றதும், வரியைக் கடமை என்றதும், வாழ்வை முறை என்றதும், செருவைப் புறம் என்றதும், உணர்வை அகம் என்றதும், குடிவாழ்வுக்கு அறம் தந்ததும், கொற்றவனுக்குப் பொருள் தந்ததும், கூடிவாழும் வாழ்வுக்குக் காதல் இலக்கணம் படைத்ததும் நீங்கள்; நீங்கள்; நீங்கள்! இன்று யார் நீங்கள் ?"-அடுக்கிவந்த அழகு மொழியில் ஆடிக்கொண்டிருந்தோர், அவனை அசையாமல் பார்த்தனர்.

கடந்துபோன காலகட்டங்களைத் தங்கள் கருத்துக் கைகளால் தடவிப் பார்த்தனர்.

மங்கிய நிலவொளியில் தெளிவின்றித் தெரியும் உருவம்போல், ஓர் உருவம் அவர்களுக்குத் தெரிந்தது.

ஊழிகளைத் தாண்டி உலையாமல் நிற்கின்ற வரலாற்றின் ஒரு படியில் அவர்கள் ஏறினர்.

தூற்றுவோர் கிளம்பினர்.

துளைப்போர் புறப்பட்டனர்.

ஆற்றுவாரில்லாது அழுதிருந்த சமுதாயம், மாற்ற வந்த தலைவனிடம் மனங் கொடுத்த வேளையிலே, போற்றுவோர் தமை முந்திப் புன்மை புறப்பட்டது

அவன் மெல்ல நகைத்தான்.

அதிலே உள்ளம் நகைத்தது.

கலங்கா நெஞ்சம் கண்களில் தெரிந்தது.

அரும்பு மீசையில் அலட்சியம் புறப்பட்டது.

பகைவரையும் பண்போடு நோக்கினன்.

வினாக்களுக்கு விடையும் தந்தான்.

நம்பாத பகைவரை மடமை கெடுத்தது.

நம்பிய பகைவரைத் தன்னலம் இழுத்தது.

அவன் தூங்குவதுபோல் நடிப்பவரை விட்டுவிட்டுத் தூங்குபவரை எழுப்பப் புறப்பட்டான்.

'நினைத்ததைச் சொல்கிறேன்; நடப்பது நடக்கட்டும்!'

தூய்மை சுமந்தவன் துணிந்து நடந்தான்.

துணிந்தவன் கால்களில் முள்ளும், மலரே!

கருத்துப் பழுத்தால் கடலும், கடுகே!

புரிந்தவன் காணும் புயலும், தென்றலே!

அறிவிலாதவர்க்கே இவ்வுலகம், பெரிது!

அறிஞனின் முன் அது, அணுவிலும் சிறிது!

தனி வழி நடந்தான்; தானே நடந்தான்.

தளர்ந்தவன் ஒருவன் பின்னோடி வந்தான்.

ஒருவன் பின்னே மற்றவன் வந்தான்.

நிலத்தில் விழுந்த துளிகள், ஓடிக் குளத்தில் விழுந்தன.

குளம் நிறைந்தது.

ஆயிரமாயிரம் படை திரண்டது.

"அந்நாள் வாழ்வை அடைவோம்" எனும் குரல் அங்கும், இங்கும், எங்கும் எழுந்தது.

என்றோ பிரிந்தவர் இன்று கூடினர்.

ஒன்றே குலமென உரத்துக் கூவினர்.

உள்ளங் கெட்டவர், ஓலமிட்டழுதனர்.

கள்ளமிகுந்தவர் கடுஞ்சொல் வீசினர்.

'ஒருவன் பின்னே மாபெரும் படையா ? உண்மை உரைப்போன் ஒருவன் அவனா ? யார் அவன் ? யார் அவன் ?'—கேள்வி எழுந்தது.

பாரோர், அவனைப் பார்க்க விரும்பினர்.

கேளார், அவன் சொல் கேட்க விரும்பினர்.

வடக்கும் தெற்கும், குடக்கும் குணக்கும், வல்லவன் புகழில் மயங்கி நின்றன.

ஒன்றே குலம்; அது எங்கள் தமிழ்க்குலம்!

ஒருவனே தலைவன்; அவனே அண்ணா!

பாடல் எழுந்தது; பழம் புகழ் மீண்டது.

நாடு மலர்ந்தது. கூடி மகிழ்ந்தது.

அன்னவன்—திராவிட மன்னவன்-பண்புள தென்னவன்—ஐம்பதை எட்டினன்.

பொன்விழா மன்றம் பூத்துச் சிரித்தது.

வானுள வரைக்கும் வாழ்க, அவன் புகழ்!

-கண்ணதாசன்.

வாழ்க! வாழ்க!

சரசுவதி - சுதர்சனம்.

கடந்த 6-9-'59 அன்று காலை 10 மணி அளவில் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு - சுலோசனா ஆகியோரின் மூத்த புதல்வி செல்வி **சரசுவதி**யை, திரு. பி. வரதராசுலு அவர்களின் மகன் செல்வன் **சுதர்சனம்** மணந்தார். சென்னை, தென்னிந்திய நடிகர் சங்கக் கட்டிடத்தில் நிகழ்ந்த இத்திருமணத்தை, **அறிஞர் அண்ணா** அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார்கள். பொதுச்செயலாளர் உள்ளிட்ட கழகப் பேச்சாளர்களும், திருவாளர்கள் இராசமன்னார், கிருட்டிணமூர்த்தி, அப்துஸ் சமத் முதலிய சென்னை மாநகராட்சி உறுப்பினர்களும் வாழ்த்துரைத்தனர். திராவிடமெங்கிலுமிருந்து கழகத் தோழர்கள் பலர் வந்து கலந்துகொண்டது குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும். கழகத் தோழர்களும் கலையுலகத்தவரும், பல பரிசில்களைத் தந்தனர். மணமக்களின் சார்பில் திரு. சி. பி. சி. அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

"தென்றல்"லும் தன் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறது. வாழ்க! வாழ்க!

ஆணவம் பிடித்த அரசனுக்கு அறிவுள்ள அமைச்சன், கொடுமை தாங்கமாட்டாமல் கொதித்துக் கிடக்கும் மக்கள் மனதிலே கொந்தளிப்பு இருப்பதைக் கூறி, முறையை மாற்றி நடந்துகொள்ளும்படி கூறும்போது செவியிலே வீழ்வதில்லை.

ஆடலழகியின் இடை அசைவிலே, இசைவாணனின் நாவசைவிலே, இன்பவல்லியின் விழி அசைவிலே இசைந்து கிடப்பான்; இறுமாப்பின் மிகுதியால், ஆபத்துத் தலை வாயிலைக் கடந்து வந்து நிற்கும் வரையிலே, உணர்ந்துகொள்ளமாட்டான், ஊராளும் உரிமை இருக்கும்போது, நமக்கென்ன குறை என்று கருதி வாழும் காவலன். பிறகு எங்கோ ஒரு பேரரவம் கேட்கும். உடனே இவன் மருட்சியடைவான்; பிறகோ பட்டத்தரசியின் பக்கலில் படுத்துறங்கவும் அஞ்சுவான்; பாலில் விஷமுண்டோ, பாவையரின் பக்கம் சேரின் பகைவனின் கத்தி நிற்குமோ என்று மிரளுவான். வீணையின் நாதமும் அவன் செவிக்கு வீரரின் ஆயுத ஒலிபோலிருக்கும். கிண்கிணி ஓசையும் கிலியே தரும். நிழலைக் கண்டு அஞ்சுவான்; நில்லான் ஓரிடத்தில்; வகையுள்ள வார்த்தை ஏதும் சொல்லான். மருட்சி! மருட்சி அவனைச் சித்திரவதை செய்யும். புரட்சி அச்சமயம் ஓர் புறத்திலிருந்துகொண்டு புன் முறுவல் புரியும். ஆணவம் கடைசி வரையிலே இராது; களம் புகவைக்கும். அங்கு சென்றதும் ஆணவம் அச்சத்திடம் அவனை ஒப்புவித்துவிடும். பித்தம் அவன் பக்கம் வந்து சேரும்.

கொடுங்கோல் மன்னர்மட்டுமல்ல, கொடுமைக்காரர் எவருக்குமே இந்நிலையேதான் வந்து தீரும். தனி மனிதர்களுக்கு மட்டுமல்ல இந்த "விதி" வகுப்புகள்; இனங்கள் ஆகியவைகளுக்கும் இதுதான் கதி, ஆம்! வரலாற்றினை நன்கு அறிந்தோர் இதனை அறிவர்.

—அறிஞர் அண்ணா.

"தம்பி...!"

"..................."

"உன்னைத்தான் தம்பி, அழைக்கிறேன் நான். திரும்பிப் பார்!..."

"என்ன என்னை அழைக்கிறீர்களா? எனக்கா இந்த அன்பழைப்பு? நடமாடமுடியாத-உங்களைப் போன்றவர்களால் தொடமுடியாத - படர்த துயரமெல்லாம் பட்டுத் துடிக்கும் எனக்கா, இப்படிப்பட்ட ஓர் இன்ப அழைப்பு?"

"ஆமாம், தம்பி! அதனால்தான் அழைக்கிறேன் உன்னை. மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்தவன் நீ! வாடாத வாழ்வை பிறருக்குத் தர நீ வாடி வதங்கியவன். ஆடாத வாழ்வு வேண்டும் உனக்கு. பாடாத குயிலாக்கப்பட்டிருக்கிறாய்"

"எதை எதையோ கூறுகிறீர்களே-எனக்குப் புரியவில்லையே?"

"புரிய வைப்பதற்காகத்தானே இங்கே, இப்படி அழைக்கிறேன். வாழப் பிறந்தவன் நீ! ஆளப் பிறந்தவன் நீ. சுயநலவாதிகளின் அடிமைச் சங்கிலி உனது அழகு மேனியை சுற்றி வளைத்திருக்கின்றது. சுக்கு நூறுக்கு! சுதந்திர முழக்கம் கிளப்பு!"

தலைசிறந்த எழுத்தாளர்!

"வெறும் ஆசை வார்த்தைகள்; வெந்து கிடக்கும் எனக்கேன் இப்படிப்பட்ட இன்ப நினைவுகளின் சபலம்"

"பார் தம்பி! இதோ, நீயேதான் கூறிவிட்டாயே. வெந்து கிடப்பதால் தான் உனது வேதனை தீர மார்க்கமுண்டு என்று கூற வருகிறேன். இது இன்ப நினைவுகளின் சபலமுமல்ல. உரிமைக் குரல் கிளப்பும் தகுதியுடையவன் நீ. உலகை நடத்தும் உன்னைக் கண்டு உல்லாசவாசிகள் நடுநடுங்கத்தான் போகிறார்கள். காட்டைத் திருத்தி நாடாக்கியவன் நீ. காடுகளை அழித்தபோது குகை வாழ் புலிகளையும் ஒழித்துக் கட்டிவிட்டோமென்றல்லவா பெருமையடைந்திருக்கிறாய். அந்தக் கொடும் புலிகள் காடுகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டது உண்மைதான்... ஆனால்... அந்த இரத்தவெறி கொண்ட புலிகளெல்லாம் இன்று எங்கே குடி புகுந்திருக்கின்றன தெரியுமா...? அதோ நீ இரவு பகலாகப் பாடுபடுகிறாயே-அந்த மேட்டுக் குடியினரின் நெஞ்சுக்குள்ளே அவைகள் ஒளிந்துகொண்டிருக்கின்றன. நீ பரிதாபத்திற்குரியவன்-பகட்டைக் கண்டு ஏமாந்துவிடுகிறாய். யாரார் உன்னை அடிமைப்படுத்தி பாதாளத்துக்குத் தள்ளிவிடுகிறார்களோ அவர்களையெல்லாம் 'எஜமானர்கள்'- வாழ்வுக்கு வழி காட்டும் கலங்கரை விளக்கங்களென நம்பிக்கொண்டிருக்கிறாய். அவன் வளர்க்கும் நாய்க்குக் கூட 'ரொட்டி' தருகிறான்...உனக்கோ கையிலே 'சட்டி' தருகிறான், தெருத்தெருவாக அலையும்படி. இன்னும் அந்த நாசகாலர்களை நீ நம்பிக்கொண்டிருக்கலாமா? உல்லாசம் அவர்களுக்குமட்டும் சொந்தமானதல்ல. அதுபோலவே நல்ல வாழ்வு வாழ வேண்டிய உரிமை அவர்களுக்குமட்டுமே உரியதுமல்ல!"

"உண்மையாகத்தானா? என்னாலும் வாழமுடியுமா இன்பத்தோடு!"

"இன்னுமா சஞ்சலம்? இதோ திட்டம்-இலட்சியபுரியை நோக்கி நடைபோடு, விழி திற-புறப்படு!"

"அண்ணா! தொல்லைக் குகையிலே சிக்கிக் கிடந்த என்னை மல்லிகைத் தோட்டத்துக்கு அழைக்கிறீர்கள். உங்களது பொன்னான இதயத்தைத்தெரிந்துகொண்டேன். அங்கே நீங்கள் கண்ணாகக் காத்து வரும் உயரிய இலட்சியங்களையும் கண்டுகொண்டேன். அண்ணா! உங்களால்தான் எங்களுக்கு வழி காட்டமுடியும். எங்களைத் தெரிந்துகொண்ட உங்களை, நாங்களும் அறிந்துகொண்டோம். புதுப்பாதை காட்டிட வந்த பேரறிஞரே! திராவிடத்தின் செல்வமே! இதோ எங்களது நன்றி. இதயத்தின் அன்புத் தொண்டைக் காட்டப் புறப்பட்டுவிட்டோம். துயர் தொலைந்தது. தூங்கிய நாங்கள் விழித்துக்கொண்டோம். வாழ்க அண்ணா! அண்ணா வாழ்க!!..."

...வாழ்த்து வான் முட்டுகின்றது. எங்கும் எக்காளத்தின் எதிரொலி. தனது சமுதாயத்துக்கு தங்க நிகர் தலைவரொருவர் கிடைத்துவிட்டாரேயென்று பூரித்து பெருமையடைகிறது திராவிடம். 'முடியுமா...நம்மாலும் ஆகுமா' என்று வேதனைப் பட்டுக்கொண்டிருந்த, இந்த நாட்டுக்குடைய நல்லவர்களை, புதுப்பாதையிலே நடைபோட வைத்தார் பேரறிஞர் அண்ணா.

'அதோ! உழவனைப் பார்! தைலம் தீர்ந்து போன கட்டை போலிருக்கும் அவனுடைய உடலைக் கவனித்தாயா? அவன் தானே உணவு தருகிறான் உனக்கும்-உல்லாசபுரிக்கும்? காலிலே பார்த்தாயா? எவ்வளவு சேறு! கஞ்சிக் கலயத்தைப் பார். புளித்த கூழிருக்கிறது உள்ளே. அவன் மனைவி அதோ, புல் சுமக்கிறாள். பிள்ளைகள் எருமை மேய்க்கின்றன' என்று ஏழையின் வேதனையை அழகாக-அப்பட்டமாக எடுத்துக் காட்டிய அண்ணா,...

"பரம்பரை பரம்பரையாகப் பிறருக்கு உழைத்து உழைத்து, பாதி வாழ்வு வாழ்ந்ததால் பாரம் ஏறி ஏறி, அவனுடைய மனமே வளைந்துவிட்டது. அவனால் நிமிர்ந்து நின்று, ஏன் என்று கேட்கவும் முடியாது. ஆனால் ஒன்று தெரிந்துகொள் அப்பனே! அவன் நிமிர்ந்து நின்று, "இது என்ன முறை ஐயா! காலமெல்லாம் உழைப்பது நான்; என்னையோ வறுமை வாட்டுகிறது. ஊரை மிரட்டி வாழ்கிறீர் நீர். உமக்கோ போக போக்கியம் குறைவற இருக்கிறது, இது நியாயமாகுமா? எத்தனை காலத்துக்குத்தான் இது நடைபெறும்?" என்று கேட்கத் துணிந்துவிட்டால் உன்னால் பதில் கூறமுடியாது; ஊராள்வோராலும் முடியாது. அவர்கள் கூட்டி வரும் பட்டாளத்தாலும் முடியாது. அந்தக் கேள்விதான், புரட்சியின் முதல் வேட்டு. இன்று குமுறல் கேட்கிறது. நாளை...?" என்று......எச்சரிக்கையும் தருகிறார் வாழ்க்கையின் உச்சியிலிருப்பவர்களைப் பார்த்து. அண்ணாவின் இதுபோன்ற வீர வாசகங்கள் வீழ்ந்துபட்ட திராவிடரின் இதயத்திலே போர் முரசுபோல ஒலித்தது. தேம்பிக் கிடந்த தென்னகத்தார் தலை நிமிர்ந்தனர்.

அண்ணா வந்தார்... அரசியலிலே நேர்மையும், நீதியும் வரத் துவங்கியது. பொருளாதார சமுதாயத் துறையிலே புதிய பொலிவு பரவியது. கலையிலே ஒழுக்கத்திலே நல்ல பண்பாடு மலரத் துவங்கியது. காவியத்திலும், ஓவியத்திலும் புதுமையும் - புரட்சியும் போட்டி போட்டுக்கொண்டு பவனி வரலாயின. அண்ணாவின், இரவு பகலென்று பாராத ஓயாத உழைப்பால் நாட்டுக்கு-வாழ்ந்து வீழ்ந்த இனத்துக்கு- 'நல்ல நிலை' பிறந்தது. சூதுக்கு ஆளாகிக் கிடந்தவர்கள்... சுந்தரப் பூக்காட்டுக்குப் புறப்படத் தயாரானார்கள். 'அண்ணா வாழ்கின்ற இந்தக் காலத்திலே நானும் வாழ்வதிலே பெருமையடைகிறேன்' என்று கூறிப் பூரிப்படையும் பெரும் பகுதி மக்களைத்தான் இன்று நாம் காண முடிகின்றது. இத்தகு புகழுக்கும், மதிப்புக்கும் காரணமாகயிருப்பவர்களையே மக்கள் தலைவர்களாக நாடு மதிக்கின்றது. மற்ற மற்ற மக்கள் தலைவர்களோடு அண்ணாவை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, அந்த அத்தனை தலைவர்களையும் மிஞ்சிவிடுகிறார் நமது அண்ணா. அவரது சேவையும்-சிறப்பும் மிக மிகப் பெரிதாக விரிவடைந்திருப்பதைக் காணமுடியும். வேடதாரிகளின் நிலையை படம் பிடித்துக் காட்ட அண்ணா வேடமிட்டார் நாடகத்திலே. ஆமாம்... மக்களின் தலைவர் அண்ணா... மக்களின் துயர் துடைக்க முகத்திலே 'அரிதாரம்' பூசிக்கொண்டார். பேசுவது மட்டுமல்ல, எழுதுவது மட்டுமல்ல, நடிக்கவும் செய்தார். எப்படிப்பட்ட நேரத்திலே? கலைஞர்களைக் கண்டதும் கூத்தாடிகளென்று கேலி மொழி பேசிய சமயத்திலே...அந்த இழி மொழிக்கும் அழிவு ஏற்படும் முறையிலே, அண்ணா நாடக மேடையிலே காட்சி தந்தார். அங்கும்புதுமையை மலர வைத்தார்; அங்கிருந்தும் பெரும் படையைக் கிளப்பி வந்தார், அறப்போருக்கு. இம்மட்டோ நமது அண்ணாவின் சிறப்பு? உலகப் பொது மொழியாம் ஆங்கிலத்திலே, அவர் அடிக்கடி எழுதி வரும் புத்தம் புதிய கருத்துரைகளைக் கட்டுரை வடிவிலே படித்து வரும் மேலை நாட்டு மேதைகள்...இங்கே புரட்சி புகைவதைத் தெரிந்து வருகின்றனர். அதைத்தொடர்ந்தே, அண்ணாவின் அறிவாற்றலையும் புரிந்து வருகின்றனர். சில நாட்களுக்கு முன்பு அண்ணா நமது கிழமைஇதழாம்ஹோம்லாண்டிலே (Home Land) 'Four Feathers' என்ற புரட்சிகரமான தலையங்கத்தைத் தீட்டியிருந்தார். அதுவும், அதுபோன்ற கட்டுரைகளும், அண்ணாவின் ஆங்கில அறிவை பட்டதாரிகளுக்கும், மற்ற நாட்டு அறிஞர்களுக்கும் தெளிவாக்கி வைத்திருக்கும். ஒரு தனி மனிதர்...இத்தகு சிறப்பும், செல்வாக்கும் பெற்றிருக்கின்றாரே...எப்படி? என்று மற்ற மற்ற தலைவர்களெல்லாம் மூக்கிலே விரலை வைத்துக்கொண்டு ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆனால் அண்ணாவோ... 'எல்லாம் தம்பிகளின் செயல்' என்று நம்மைக் காரணம் காட்டிவிடுகிறார். 'தம்பியுடையான்படைக்கஞ்சான்' என்று கூறி வீர நடைபோடுகிறார். வாழ்க அண்ணா! அவரே நம் தலைமுறையின் தலைசிறந்த எழுத்தாளர்!

—மா. தங்கவேலர்.

நம் நாளின் இலக்கியவாணர்!

பத்தாண்டுகளுக்கு முன்னால் ஒரு நாள், உயர்நீதி மன்றத்தை ஒட்டிய நடைபாதை ஒன்றில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது நான் கல்லூரி மாணவன். என்னைச் சுற்றிலும் ஏராளமான கூட்டம்; அந்த வழியே தப்பித் தவறி வந்துவிட்ட, என் நண்பர் ஒருவர் - வேற்று மொழிக்காரர்- "ஏன் இங்கு நிற்கிறாய்? இவ்வளவு கூட்டம் ஏன் நிற்கிறது?" என்று ஆங்கிலத்தில் வினவினார். நான் அண்மையில் இருந்த செயின்ட்மேரி மண்டபத்தைச் சுட்டிக்காட்டி "அங்கு பார்த்தீரா? அங்கே ஒரு மாநாடு நடக்கிறது! அதைக் கேட்கத்தான் இவ்வளவு கூட்டம்!" என்றேன். செயின்ட் மேரி மண்டபத்தில்கூட்டம் வழிந்து, தெருவெல்லாம் நிரம்பி, உயர்நீதி மன்றத்தை ஒட்டிய நடைபாதை எல்லாம் மக்கள் நின்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். "அங்கே யார் பேசுவது?" என்றார் என் நண்பர். "அண்ணாதுரை!" என்றேன் நான். "அது யார் அது? அண்ணாதுரை யார்? அவர் எப்படி இருப்பார்?" என்று கேட்டார் நண்பர். நான் பதில் சொல்வதற்குள், என் அருகே நின்றுகொண்டிருந்த என் வேறொரு நண்பர் - மாற்றுக் கட்சித் தோழர்- ஆங்கிலத்தில், "ஊம், அண்ணாதுரை பெரிய ஆளல்ல. நாலடி மூன்றங்குலம்தான் இருப்பார்!" என்று பதில் கூறினார். நண்பர் கூறிய பதிலில் திருப்தி அடையாதவர் போல் வேற்றுமொழி நண்பர் என்னைப் பார்க்க, நான், "ஆம். அண்ணாதுரை குள்ளமான மனிதர்தான்; ஆனால் மிக உயர்ந்த மனிதர். பார்த்தால் தெரியவில்லையா! மாநாடு எங்கே நடக்கிறது, கூட்டம் இங்கே இருக்கிறது அல்லவா இதிலிருந்தே தெரியவில்லையா, அண்ணாதுரை எப்படிப்பட்ட பேச்சாளர் என்பது?" என்றேன். நண்பர் திருப்தி அடைந்தவராகக் காட்சி தந்தார்.

'நாலடி மூன்றங்குலம்' என்று நண்பர் குறிப்பிட்டாரே, அது இன்று தமிழகத்தின் ஒப்பற்ற, ஒரே தலைவரைக் குறிக்கும் சொற்றொடராக மாறிவிட்டது. 'மறப்போம், மன்னிப்போம்' என்று அண்ணாவே ஒருமுறை குறிப்பிட்டதுபோல, இச் சொற்றொடர் அண்ணாவைக் கேலி பேசப் பயன்பட்டாலும், இன்று அதுவே அண்ணாவைப் பற்றித் தெரியாதவர்களுக்கெல்லாம் தெரியப் படுத்தும் முறையில் பயன்படுகிறது. அண்ணாவின் அங்க அளவுகளை ஆராயத் தலைப்பட்ட சில அப்பாவி நாயகிகள் அண்ணாவைக் கேலி பேசுகிறோம் என்று நினைத்து ஏச, அதுவே அண்ணாவைப் பற்றித் தெரிந்துகொள்ள, ஒரு வாய்ப்பை ஏற்படுத்திவிட்டது. அண்ணாவின் உயரத்தைக்குறைவாகப்பேசுவோர், அவருக்குஏற்பட்டுள்ளபெருமையை, புகழை, சிறப்பைக் குறைக்கமாட்டாமல் தவிக்கின்றனர். ஆகவேதான் அவர் குள்ளமான மனிதர் என்று கூறித் தங்களைத்தாங்களே ஏமாற்றிக்கொள்கின்றனர்; கொள்கையால் உயர்ந்த மனிதர், குணத்தால் உயர்ந்த பண்பினர், அறிவாற்றலால் உயர்ந்தவர், அரசியல் திறமையில் உயர்வு பெற்ற, இக்குள்ளமான மனிதர், இந்நாட்டு விடுதலைக்கு வித்திட்ட ஒளிவிளக்குகளில் ஒப்பற்றவர்.

நான் முதலில் குறிப்பிட்டதுபோல், அண்ணாவின் பேச்சுக்களைக் கேட்க ஆயிரக்கணக்கானவர் கூடுவர் என்பதை நாமறிவோம்; நாடு அறியும். பேச்சுக்கலையில் அண்ணாவைப்போல் வெற்றிபெற்றவர் யாருமே கிடையாது என்று கூறலாம். பேச்சு என்பதை ஆங்கிலத்தில் Speech என்பர். அது வேறு. ஆங்கிலத்தில் Oratory என்பது பேச்சுக்கலையின் சிகரம். அதில் - அந்தக் கலையில் - மாற்றாரை மயக்கும் வண்ணம் சிறப்பாகப் பேசுவதில் - அண்ணாவிற்கு இணை அண்ணாதான். உண்மையைச் சொல்லப்போனால், தமிழ்நாட்டு அரசியலில் சத்தியமூர்த்தியைப்போல் பேசிய, பேசக்கூடியவர், அறிஞர் அண்ணாவேதான். சத்தியமூர்த்தியின் வாரிசுகள் இன்று பலர் உள்ளனர்; அவர்கள் எல்லாம் அண்ணாவின் முன்னாலே நின்று பேசமுடியாத, பேசி வெற்றி பெறமுடியாத 'டூப்ளிகேட்டு'கள் ஆவர். "பேச்சா"லேயே ஒரு கட்சியை வளர்த்தவர் - பல்லாயிரம் கிளைக் கழகங்களையும், இரண்டு, மூன்று இலட்சம் அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு மாபெரும் கட்சியை வளர்த்தவர் - அண்ணாதுரை ஒருவர் தான் என்று தயங்காமல் கூறலாம். இன்று நாட்டிலே பார்க்கிறோம், பல தலைவர்களையும், பல லட்சங்களைப் பாங்கிக்கணக்கில் வைத்துள்ள கட்சிகளையும். அவை எல்லாம் தொண்டர்களில்லாத, தலைவர்களேஉள்ள கட்சிகள். பணமூட்டைக் கட்சிகள் அவை. ஆனால் பணமில்லாமலே, தன்னுடைய அறிவாற்றலில் மட்டும் நம்பிக்கை கொண்டு, தம்பிமார்களின் துணை கொண்டு, ஒரு மாபெரும் கட்சியை அமைத்து, வெற்றிப்பாதையிலே வீறுநடைபோடும் தலைவர் வேறொருவரில்லை, அண்ணாவைத் தவிர.

அண்ணாவின் பேச்சிலே, பேச்சுக்கலையின் அத்தனை உத்திகளையும் கேட்கலாம்; மாணவர்கள் கூட்டமா, அவர்களுக்கேற்பப் பேசுவார். தொழிலாளர்களின் கூட்டமா, அவர்கள் உளம் கமழப் பேசுவார். "எட்டி நோக்கினால் எட்டு நாளைக்குக் கழுத்து வலிக்கும் குப்பன் கட்டுகிறான் மாடமாளிகை; ஆனால்அந்தக் குப்பன் வசிப்பதோ குனிந்து செல்லும் குடிசை" என்றார் ஒரு கூட்டத்தில், அண்ணா. தொழிலாளர்கள் தலைவர்களும் பேசமுடியுமா இதுபோல? அரசியல் கூட்டமா, சொல்ல வேண்டியதில்லை. மாற்றார் வியக்கும் வண்ணம் அள்ளித்தெளிப்பார் அழகு தமிழில் அரசியற் கருத்துக்களை! இப்படியாக அவரது பேச்சுக்கள் மாணவர் உலகைக் கவர்ந்துவிட்டதில் வியப்பில்லை. பல கல்லூரிகள் இன்று கழகத்தின் பாசறைகளாக விளங்குகின்றன என்றால், அது அந்த நாளில் அண்ணா கல்லூரிகளில் நிகழ்த்திய சொற்பெருக்குகளில் ஈடுபட்டு அவர் கட்சியில் சேர்ந்த சில மாணவர்களின் தொண்டின் தொடர்ச்சியாகும். 'நாடும் ஏடும்' என்று அண்ணா பேசிய பேச்சை எத்தனை மாணவர்கள் வேதபுத்தகம் போல் படித்துப் பாதுகாத்தார்கள் என்பது இன்றைய மாணவர்களுக்குத் தெரியாது. 'ஏ தாழ்ந்த தமிழகமே!' என்ற அண்ணாவின் மற்றொரு பேச்சு நூல் இதேபோன்ற உயர்ந்த பேச்சாகும். அதில் அவரது கருத்துக்கள் - 'ரயிலேறிக்கொண்டு ராமேசுவரம் போய்க் கும்பிடுவதைப் போல்' முதலியன - வைதீகப் பழக்க வழக்கங்களில் ஈடுபட்டுக்கிடந்த மாணவர் உலகைப் புரட்சிப் பாதைக்கு அழைத்துவரச் செய்துள்ளன என்றால் மிகையாகாது. இந்த நாளில் பள்ளி மாணவர்கள் எல்லாம் 'நான் தி. மு. க.' என்று அச்சமில்லாமல் கூறிக்கொள்ளமுடிகிறது என்றால், அது அந்நாளில் சில மாணவர்த்தலைவர்கள் அண்ணாவின் மேற்படிப் பேச்சுகளை இதர மாணவர்களிடையே பரப்ப மறைமுகமாகவும் நேரிடையாகவும் செய்த முயற்சிகளின் பலனே ஆகும். சட்டக் கல்லூரியில் அண்ணாவின் பேச்சுக்கள் மறக்கமுடியாதவை - "சட்டம் ஓர் இருட்டறை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு" - போன்ற கருத்துக்கள் நினைவில் நிழலாடுகின்றன. காந்தியடிகள் சுட்டுக் கொல்லப்பட்ட போது, அண்ணா வானொலியில் பேசிய பேச்சு மாற்றுக் கட்சித் தோழர்களாலும் பாராட்டப்பட்டது. வேலூரில் காந்தியடிகளின் உருவை அண்ணா திறந்துவைத்து உரை ஆற்றியபோது, "மாற்றான் வீட்டு மல்லிகைத்தோட்டம் என்பதால் மணமில்லை என்று கூறுபவர்கள்அல்ல நாங்கள்," என்று கூறியது எவ்வளவு பொருத்தம்! அண்ணாவின் பேச்சுக்களில் அத்தனை சுவைகளையும் காணமுடியும். எங்கெங்கோ அழைத்துச் செல்வார். ஆச்சரியப்படுவோம் நாம், விஷயத்தைவிட்டு வெகுதூரம் சென்றுவிட்டாரோ என்று; கடைசியில் விஷயத்திற்கும் தொடர்பு ஏற்படுத்துவார்; நம்மையறியாமல் நம் கைகள் தட்டும்.

அங்கத்தின் அசைவுக்குள் அரசியலின் தேக்கமும் அணுவுக்குள் அணுத் தேடும் ஆராய்ச்சிப்பாக்கமும் ஆன அண்ணாவை அறியாதவர் இன்று தமிழ்நாட்டில் யாரும் இருக்கமுடியாது. "Anna is a house-hold word in Tamilnad" என்று அவாள் பத்திரிகையான 'சுதந்திரா' ஒரு முறை எழுதியது நினைவு கூரத்தக்கது. அண்ணா எப்படி ஓர் ஒப்பற்ற பேச்சாளரோ, அதேபோல் ஒரு சிறந்த எழுத்தாளருமாவர். அண்ணாவிற்குக் கைவராத கலையே இல்லை எனலாம். பேச்சு, எழுத்து, நாடகம், சினிமா, அரசியல், பொருளாதாரம் முதலிய பல துறைகளிலும் வெற்றி கண்டவர் அண்ணா. அண்ணாவைத் தமிழ்நாட்டின் 'பெர்னாட்ஷா' என்று மறைந்த "கல்கி" அவர்கள் கூறியிருக்கிறார். அண்ணாவை இன்று நாடு முழுவதும் தெரிந்துகொண்டுள்ளது என்றால், அது அவரது சொந்த முயற்சியின் காரணமாகத்தான் என்பதில் தவறில்லை. அண்ணா மட்டும் வேறொரு கட்சியில் இருந்தால் அவரே குறிப்பிட்டுள்ளதுபோல், "நினைத்த நேரத்தில் நியூயார்க் செல்லவும், வாஷிங்டன் போகவும்" முடியும். ஆனால் திருநாட்டின் வாழ்வுக்குப் புதுப்பாடம் கண்டு, தங்கத்தில் 'வைரத்தின் நீரோட்டம் பார்க்கும் தன்மைத் தாய்த் தமிழ் கற்ற பேராளனும்' பெருந்தகை அண்ணா, ஊர் வாழத் தான் தேயும் உணர்ச்சியும், நாட்டு விடுதலையில் நாட்டமும் கொண்டவர் அல்லவா!

அண்ணா இன்று சாதித்துள்ளவை ஏராளம், ஏராளம். சட்டமன்றத்தில் உறுப்பினரானார்; அவருடன் பதினைந்து பேர் அமைந்துள்ளனர். அவர் ஆட்சிப் பீடத்தில் அமரும் நாளும், வெகு தூரத்தில் இல்லை என்பதற்கான அறிகுறிகள் காண்கின்றன; அவரது இலட்சிய கீதமான திராவிட நாட்டு விடுதலையை அவர் வாழ்நாளிலே காண்பாரானால், அதுவே அவர் வாழ்வின் வெற்றியாகும்; அவர் வரலாறு, தமிழகத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்படும் என்பதில் ஐயமில்லை.

"வைவாரின் முன்தோன்றி, வாழ்த்துக்கள் பெற்றும், வாலாட்டும் பல பேரைத் தலையாட்ட வைத்தும், நைவாரின் வறுமைக்குப் பகையாக நின்றும், நடிப்பாரை உலகோடு சமமாகச் செய்தும், பேர்பெற்ற" அண்ணா, "தென்னாட்டின் அன்பெல்லாம் துயில்கொள்ளும் நெற்றி" உடையவராயிருக்கிறார். அந்தப் பரந்த நெற்றி அவர் அறிவாற்றலைப் பறைசாற்றும் கருவி. அவர் ஒப்பற்ற பேச்சுக்களை எல்லாம் ஒன்றுதிரட்டி, பெரிய அளவில் வெளியிடவேண்டும். ஆங்கிலத்தில் "ஸர் வின்ஸ்டன் சர்ச்சிலின் பேச்சுகள்" (Complete Speeches of Sir Winston Churchill) "நேருவின் சொற்பொழிவுகள்" (Complete Speeches of Pandit Nehru) என்றெல்லாம் வெளிவருகின்றனவே, அதுபோல் அண்ணாவின் ஆயிரமாயிரம் பேச்சுகளை எல்லாம் ஒன்றுதிரட்டி வெளியிடவேண்டும்; பிற்காலத் திராவிடத்தில் வாழ்வோர் படித்துணரவும், அண்ணா அவர்கள் எத்துணைக் கஷ்டப்பட்டு, பேசிப்பேசி, ஒரு கட்சியைவளர்த்து, நாட்டை விடுதலை அடையச் செய்தார் என்பதை உணரவும், அந்நூல் பயன்படுவதாகுக!

"உள்ளத்தாற் பொய்யாத உயர்வு நிலையும், வெள்ளத்தோடு உறவாடும் அன்பு மனமும், அள்ளத்தான் குறையாத கருத்தோட்டமும், ஆன அண்ணா அவர்கள்" ஒழுக்கத்தால் பிறர் போற்றும் உயர்வாழ்வும், உள்ளன்பில் குலம்சேர்க்கும் நற்பண்பும், பழக்கத்திற்கினிதான தன்மையும் பணிவுக்கோர் நாணலெனும் நிலைமையும், கலக்கச்சோர்வு அறியாத ஆண்மையும், கண்மறைந்தபின் பேசாப் பெருந்தன்மையும்கொண்டு விளக்கத்தால் பலர் நெஞ்சை வெற்றிபெற்று வீரத்தின் இடமாக இன்று விளங்குகிறார். அண்ணாவிற்கு ஐம்பதாண்டுகளாகிவிட்டன என்றால் நம்பமுடியவில்லை; அவ்வளவு இளையவராக இருக்கிறார். இளைஞர்களிடையே. முதியவராகக் காட்சியளிக்கிறார், அறிவாற்றலில். அவரது அறிவாற்றலும், பேச்சுத் திறனும் வீண் போகா; வெற்றி முரசு கேட்கிறது; விடுதலைச் சங்கு ஒலிக்கிறது; அவரது இலட்சியகீதம் வெற்றி பெறும் நாள் வெகு தூரத்தில் இல்லை. வாழ்க அண்ணா! வளர்க அவர் தொண்டு!

ஆக, இவரே நம் நாளின் இலக்கியவாணராக விளங்குகின்றார். ஒளிமிகுந்த மணியாக, கலைநிறைந்த அறிவாகத் திகழும் இவ்விலக்கியவாணரின் உழைப்பால் திராவிடம் எழில் பெறுவதை அறிகிறோம். அந்த உழைப்புக்கு மதிப்பளித்து வணங்குகிறோம்.

-நாநிலத்தலைவன் எம். ஏ.

நசிவு இலக்கியமாம்!

கூடலரசன்

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தின் மறுமலர்ச்சித் துறைகள் பலவற்றிலும் தன் முத்திரையைப் பதித்து எங்கும் எதிலும் புதுமைகளைச் சேர்த்து வைத்திருக்கிறது. அரசியல் அரங்கிலும், நாடக மேடையிலும் திரை ஓவியங்களிலும், கழகத்தின் கருத்துக்களை இழைந்தோடச் செய்த பெருமை, மாற்றாரும் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும். அதுபோலவே திராவிட மாணவர் கழகங்களை ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளியிலும், கல்லூரியிலும், பல்கலைக் கழகங்களிலும் உருவாக்கி வளர்த்த பெருமை நம் கழகக் காவலர்களுக்கு உண்டு. மாணவர்கள் அறிஞர் அண்ணாவின் விழிகாட்டும் வழிச் செல்லும் ஆற்றல் திறம் படைத்த படைக்கலன்கள் என்பதனைப் பத்தாண்டுகளுக்கு மேல் தமிழகம் கண்டு வருகிறது. கழகத்தின் காலடிச் சுவடுகள் கல்லூரி மேடைகளிலே விழுந்துள்ளன. ஆனால் மற்ற மற்ற அரசியல் அமைப்புகள் மாணவர்களின் இதயங்களிலே இடம் பெற இயலவில்லை. கழகச் சார்புடைய மாணவர்கள் கண்ணியம் வளர்த்துக் கடமையைச் செய்கிறார்கள். தாயகத்திற்கும் தமிழகத்திற்கும் தமிழுக்கும் இழுக்கு ஏற்படுத்தும் எந்தச் செயலையும், எத்துணை இன்னல்கள் விரட்டி வரினும் எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தி வீர முழக்கமிடும் உயர்பண்பினைப் பெற்றுள்ளார்கள். இரண்டொரு கிழமைகளுக்கு முன்னால் சென்னையில் நடைபெற்ற மாணவர் மாநாடு மகத்தானதொரு சிறப்பினைப் பெற்றுள்ளது. கழகத்தின் தலைவர்கள் மாநாட்டிலே கலந்துகொள்ளாவிட்டாலும் வருங்காலத் தலைவர்கள் அங்கே கூடி நின்று கொள்கைக் குரல் கொடுத்தனர். முன்னேற்றக் கழகத்தின் மாணவர்கள் எத்தகைய செயல் திறமும் கொள்கைச் செறிவும் கொண்டவர்கள் என்பதனை நாட்டோருக்கும் நாடாள்வோருக்கும் நன்கு புரிய நவின்றுள்ளனர். தமிழகத்துக் கல்லூரிகளில் மதுரை அமெரிக்கன் கல்லூரி எப்போதும் எல்லா வகையிலும் முன்னணியில் இடம் பெறும் கல்லூரியாகும். அங்கே அமைகின்ற தமிழ் மன்றம் சில ஆண்டுகளுக்கு முன்னாலே பரிமேலழகர் பெயராலே அழைக்கப்பட்டது. அறிவியக்கத்தின் மாணவச் செம்மல்கள் முயன்ற பிறகுதான் திருவள்ளுவர் கழகம் எனப் பெயர் மாறிற்று. கல்லூரியில் பெற்ற பெருஞ் சிறப்பினை, அமெரிக்கன் கல்லூரியின் பெருமையினை, அணி செய்து முன்னேற்றக் கழகத்தின் சிறந்த சொற்செல்வராகத் திகழ்கிறார், அருமை நண்பரும் வழக்கறிஞருமான வே. செளந்திரராசன்! இப்போதும் மாணவர் படை நம் பக்கமே என்பதற்கு அறிகுறியாக மாணவர் மன்றத் தலைவர் தோழர் இந்திரசித், மாநில மாணவர் கழகத்தின் செயற்குழுவிலே இடம் பெற்றுள்ளார்! அவரின் செயலாற்றும் முறைக்கும் திறமைக்கும் சான்றாக ஒரு புதிய வரலாற்றினைத் தோற்றுவித்துவிட்டார், இரு கிழமைக்கு முன்னாலே! மதுரைச் செய்தியென்றாலும் நம் மாநிலத்து மாணவத் தோழர்களுக்கெல்லாம் தெரியவேண்டிய செய்தியாதலால் அறிமுகப்படுத்தும் பணியேற்றுள்ளேன்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்துக்கள் கல்லூரி மாணவர்களிடையே வளர்கின்றன. பேராசிரியர்களும் புலவர்களும் தங்கள் கடமைச் செய்துகொண்டே, கழக வளர்ச்சியினையும் கவனிக்கிறார்கள். மாற்றுக் கட்சியிலே உள்ள பெருந் தலைவர்கள் இவைகளைக் காணும்போது கவலைப்படுகிறார்கள்; கலக்கமடைகிறார்கள். மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சி இதனைத்தான் எடுத்துக் காட்டுகிறது. 31-8-59-ம் நாள் மாலை 4½ மணி அளவில் அமெரிக்கன் கல்லூரித் தமிழ் மன்றமான திருவள்ளுவர் கழகத்தின் இரண்டாவது கூட்டத்தில் தோழர் ப. சீவானந்தம் "புதுமை இலக்கியம்" என்னும் பொருள்பற்றிப் பேசுவதற்கு அழைக்கப்பட்டிருந்தார். அவராலும் இந்தத் தலைப்பில் அரிய கருத்துக்களைச் சொல்லமுடியும் என நம்பி அவரை விரும்பி வரவேற்றார்கள்! கல்லூரி மேடைகள் இந்தக் காலத்தில் எவ்வண்ணம் இருக்கின்றன என்பதை, தோழரான சீவானந்தமும் தெரிந்துகொண்டே இசைவு தந்துள்ளார். மன்றத் தலைவர் இந்திரசித் சொற்பொழிவாளரை அறிமுகம் செய்து பேசினார்; சீரிய முறையில் தான் ஒரு முன்னேற்றக் கழகத்தான் என்ற பெருமை சிறிதும் பங்கப்படாத முறையில் பாராட்டுரை வழங்கினார். புதுமை இலக்கியத்தின் வளர்ச்சியினைக் குறிப்பிட்டு பாரதியாரின் சிறப்பியல்புகளையும், கவிமணி தேசிகவிநாயகத்தின் கவிதைத் தேன் மொழிகளையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதைக் கருத்துக்களையும், அறிஞர் அண்ணா அவர்களின் அருமையான சில சொல்லோவியங்களையும் விளக்கித் தன் கருத்தினைக் கூறி முடித்தார். மாணவர் தலைவரின் பேச்சினை மன்றத்திலேயிருந்த மாணவர்களும் மற்றவர்களும் மிகப் பொறுப்புடன் கேட்டு, மகிழ்ச்சியைக் காட்டினர். சீவானந்தம் பேசினார். துவக்கியவுடனேயே சொன்னார் "என்னை முதலில் 'நசிவு இலக்கியமும் நல்ல இலக்கியமும்' என்னும் பொருள்பற்றிப் பேசச்சொன்னார்கள். ஆனால் இப்போது 'புதுமை இலக்கியம்' என்பதுபற்றிப் பேச வேண்டும் என்று கேட்டுவிட்டார்கள். நான் திருவனந்தபுரத்திற்குப் போகிற அவசரத்தில் என்னுடைய பேச்சினை முடித்துக்கொள்ள வேண்டும்" என்று தொடர்ந்திட்டார்! 35 ஆண்டுகளுக்குமேல் பொது வாழ்விலே இருப்பவன் என்று பெருமை பேசிக்கொண்டவர், அன்றைய தினம் அந்தத் தகுதியைக் காட்டிக்கொள்ள முடியவில்லை! மாணவர்கள் அறியாத புதுமை இலக்கியத்தை, உலகத்தின் மூலைகளிலெல்லாம் மறைந்து நிற்கும் இலக்கியப் புதுமைகளின் பட்டியலைத் திரட்டிக் காட்டி இரண்டு மணி நேரமாவது பேசித் தனக்குள்ள இலக்கிய மேதைத் தன்மையைக் காட்டுவார் என்றே நான் எதிர்பார்த்தேன்! ஆனால் அவர் தன்னுடைய தலைப்பினையே மறந்துவிட்டார். தாம் எதற்காக அழைக்கப்பட்டோம் என்ற உண்மையினையும் மறந்தே விட்டார்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது சீவானந்தம் எந்த அளவுக்குச் சீற்றம் வைத்து, உள்ளத்தாலே சித்திரவதைப்படுகிறார் என்பதை அவரின் சொற்களை வைத்துக் கணக்கிட முடியும். புதுமை இலக்கியக் கர்த்தாக்கள் என்ற வரிசையில் பாரதிதாசனையும் அண்ணாத்துரையையும் ஏற்றுக்கொள்ளலாமா என்ற வினாவை அடிக்கடி திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டார்! மாணவர் தலைவரின் கருத்துக்களை மறுத்துப் பேசுவதற்காக மட்டுமே சீவானந்தம் கல்லூரிக்கு அழைக்கப்படவில்லை என்பதை, அவர் அன்றையதினம் உணராதது வருந்தத்தக்கதாகும்! மாணவர் மன்றத்தவர் தந்துள்ள தலைப்பு, "புதுமை இலக்கியம்!" இதனை விளக்கி விரிவுரையாற்ற வேண்டியகடமை வந்த விருந்தாளிக்குண்டு! மாணவர் தலைவர் கருத்துக்களை மறுப்பதற்குச் சில சான்றுகளைச் சொல்லி தன் பேச்சினை வளர்த்திருக்கவேண்டும்! ஆனால் இந்தப் புதிய இலக்கியத் தந்தை – அவருடைய கட்சியில் அவருக்கு இணை அவரே என்று அவராலேயே மதிப்பிடப்படுகிற சீவானந்தம், கல்லூரி மன்றத்து மேடையினை பாரதிதாசனையும், அண்ணாவையும் தூற்றுகின்ற மேடையாக்கினார்! பாரதியாரைத் தவிர வேறு எவருமே புதுமைக் கருத்துக்களைச் சொல்லவில்லை என்றார். பாரதிதாசனிடத்திலே அந்தத் தன்மை இல்லையென்றும் நவின்றார்! அவரிடத்திலே புரட்சி அம்சம் இல்லை. அவரும் அந்த வம்சத்தையும் சேர்ந்தவரல்ல. மன்றத் தலைவர் எடுத்துக் காட்டிய 'புரட்சிக் கவி'யில் புதுமை இலக்கிய நயம் இல்லை எனத் திரும்பத் திரும்பக் கூறித் தன் கண்டுபிடிப்பினைத் தெரிவித்தார்! பாதியாரைப் பாராட்டத் துடித்த சீவானந்தம் பாரதிதாசனைப் பழித்தார்! சென்னை - தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் பேசிய தேசிகன் மறைமலை அடிகளாரின் அழகுத் தமிழ் நடையை இகழ்ந்தார். அமெரிக்கன் கல்லூரியில் பேசிய சீவானந்தம் பாரதிதாசன் புரட்சிக் கவி அல்லவே அல்ல எனச் சாதித்தார்! பாரதியாரைக் கூட "கல்கி" கிருட்டிணமூர்த்தியைப் போன்றவர்கள் ஒரு காலத்தில் மகாகவி அல்ல என்றுதான் மதிப்பிட்டார்கள். ஆனால் பாரதிதாசன் புதுமைக் காலத்தின் விடிவெள்ளி என்பதனைத் தமிழகம் எப்போதோ உணர்ந்துகொண்டதால்தான், அவரைப் புரட்சிக்கவியென்று பாராட்டி மகிழ்ந்தது! கனகசுப்புரத்தினம் அவர்களின் 'புரட்சிக்கவி' என்ற கவிதைக்காக மட்டுமே அவர் புரட்சிக்கவிஞராகவில்லை—மன்றத் தலைவரும் அதனைக் குறிப்பிட்டுக் காட்டவில்லை. ஆனால் தன் நிலை மறந்துவிட்ட சீவானந்தம் பில்கணன் கதை பாடிய பாரதிதாசன் புரட்சிக்கும் புதுமைக்கும் ஏற்றவரல்ல என்ற முறையில் தன் எரிச்சலைக் கொட்டினார், குமுறிப் பேசினார்!

திராவிட முன்னேற்றக் கழகம் வளர்த்திருக்கும் புதுமைக் கருத்துக்களை–இலக்கியத்தை மறுக்க சீவானந்தம் வேறு வாய்ப்புகளைத் தேடிக் கொள்ளாமல், தன் வேதனையைப் போக்கிக்கொள்ளும் வகையில் பேசிய பேச்சுக்களை அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் எதிரிகளைக் கடுமையாகத் தாக்கிப் பேசுவதாக எண்ணிக் கொண்டு கல்லூரிமேடையில் முழக்கமிட்டார் அத்தோழர்! "நான் எதை வேண்டுமானாலும்பேசுவேன் புதுமை இலக்கியம் என்ற தலைப்பு வேண்டாம்" என்று சொல்லியிருந்தால்கூட மாணவர்கள் இசைந்திருப்பார்கள். தலைப்பிலே பேச வந்த சொற்செல்வர்–இணையற்ற இலக்கிய மேதை, தனக்கே உரிய ஒட்டு மொத்தக் கணக்கையும், அப்பட்டமான உண்மைகளையும், விஞ்ஞானக் கண்ணோட்டத்தையும், சோசலிச நாடுகளின் முன்னேற்றத்தையும், கம்யூனிச வளர்ச்சியையும், 'புதுமை இலக்கியம்' என்ற தலைப்பிலே பேசியதைக் கண்டுதான் மாணவர்கள் கைதட்டிச் சிரித்தார்கள். பேசிய பெருந்தகையார் எதனை நினைத்துக்கொண்டாரோ? 1945-ம் ஆண்டில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு பொற்கிழி அளித்து நிகழ்த்தப்பட்ட விழாவில் சீவானந்தமும் பேசியிருக்கிறார். அன்றையத்தினம் இந்தப் பேரறிஞர் அவர்கள் "பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவி அல்ல. இவருக்கு ஏன் விழா? பொன்னாடை? பொற்கிழி?" என்றெல்லாம் அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே சொல்லவில்லை! ஆனால் இப்போதுமட்டும் சீவானந்தம் இந்த இழி செயலுக்கு இணங்கியது எதனால்? புரட்சிக் கவிஞர் தமிழக மக்கள் முன்னிலையில் தவறுகள் செய்துவிட்டாலும் காலத்தால் அழியாத கவிதைக் கருத்துக்களைத் தந்துள்ள ஒரே காரணத்தால் மன்னிக்கத் தக்கவரானார்! கம்யூனிஸ்ட் கட்சியின் இலக்கியச் செல்வர் இதனைப் புரிந்துகொள்ளாதது

— 12-ம் பக்கம் —

தொண்டும் தொண்டரும்.

'வெடித்துக் கிடக்கும் வயல், படர்ந்து போகும் நிலையில் உள்ள விளக்கு, பட்டுக்கொண்டே வரும் நிலையில் உள்ள மரம், உலர்ந்துகொண்டு வரும் கொடி, வற்றிக்கொண்டிருக்கும் குளம்–இவைபோல, சமுதாயத்தின் நிலையும் நினைப்பும் நடவடிக்கையும் ஆகிவிடும்போது, இந்த அவல நிலையைப் போக்கியாக வேண்டும் என்ற ஆர்வமும், போக்கமுடியும் என்ற நம்பிக்கையும், போக்கக்கூடிய அறிவாற்றலும் கொண்டு ஒரு சிலர் முன் வருகிறார்கள். அறிவுப் பண்ணைக்குப் பணியாற்ற அவர்களை நாடு வரவேற்பதில்லை. நையாண்டி செய்யும்; மதிப்பளிப்பதில்லை–மாச்சரியத்தை வாரி வீசும்; துணை புரிவதில்லை–தொல்லை தரும். எனினும் அந்த ஒரு சிலர் ஓயாது உழைத்து, சலிப்பு, கோபம், வெறுப்பு, பகை எனும் உணர்ச்சிகளுக்குப் பலியாகிவிடாமல், புன்னகையும் பெருமூச்சும் கலந்த நிலையில் பணிபுரிந்து, பட்ட மரம் துளிர் விடும்வரை, படர்ந்து போக இருந்த விளக்கு மீண்டும் ஒளிவிடும் வரையில் பாடுபட்டு, வெற்றி கண்டு மறுமலர்ச்சி உண்டாக்கி வைக்கிறார்கள்."

—அறிஞர் அண்ணா.

பாமாலை!

பாடி வரும் பொன்னி.

இயலுக்கோர் இலக்கணத்தை இயற்றித் தந்தார்;
இன்சுவையைத் தமிழ்மொழிக்கே ஏற்றி வைத்தார்!
அயர்ந்திருக்கும் மக்களுளம் ஆக்கம் பெற்று
அருமைமிகு திராவிடத்தின் ஏற்றம் காண
உயர்வான வீரத்தை ஊட்டும் வண்ணம்
உயிர்நடையே இயல்பாக இயலில் சேரும்;
இயல்மொழியில் இசையழகைக் கூட்டி வைத்தே
இலக்கியத்தே மறுமலர்ச்சி சேர்த்தார் அண்ணா!

அடிமையிலே வாழ்வதினால் வாடிச் சோர்ந்த
அகமென்னும் பயிரெல்லாம் தழைத்தே ஓங்கப்
படிந்துவரும் நன்மழைநீர்ப் பொன்னியாகப்
பசுந்தமிழில் இயல்மொழியை வடித்துத் தந்தார்!
வடிக்கின்ற கருத்தென்னும் உரத்தை இட்டு
வளர்க்கின்றார் மக்களுளப் பயிர்கள் தம்மை,
கடிக்கின்ற களைகளைந்தார்; பயிரு மின்னாள்
கதிர்முற்றி மணிகொழிக்கக் காண்போம் அண்ணா!

நாடகத்தில் நாட்டினது நல்ல கத்தை
நடிப்பாலே மொழியாலே கூட்டி வைத்து
நாட்டகத்தே மறுமலர்ச்சி தோற்று வித்தார்!
நாடுகின்ற மக்களுள்ளம் பண்ப டுத்தி
சாடவைத்தார் மடமையிலே முளைத்த கீழ்மைச்
சாத்திரத்தை; மறைமொழியை; மடமை தன்னை!
பாடிவரும் கருத்தூற்றுப் பொன்னி- எங்கள்
பாசஞ்சேர் உள்ளத்தே வாழும் அண்ணா!

—"ரவி".

★

எல்லாம் ஆனார்.

தென்கடல் முத்தம் அண்ணா!
திராவிடச் சுரங்கம் அண்ணா!
தென்மலைப் பொருளே அண்ணா!
திருநதிப் பயனே அண்ணா!
நன்சுடர் மணியே அண்ணா!
நறுஞ்சுவைக் கனியே அண்ணா!
பன்மொழிப் பாங்கே அண்ணா!
பாமாலைச் சுவையே அண்ணா!

முத்தமிழ் வளர்த்த அண்ணா!
முடிசூடா மன்னர் அண்ணா!
வித்தகப் புத்தர் அண்ணா!
விளங்குமெய் அறிஞன் அண்ணா!
தத்துவக் குறளோன் அண்ணா!
தளபதி எங்கள் அண்ணா!
உத்தமப் புதுமை அண்ணா!
உலகெலாம் போற்றும் அண்ணா!

—தொ. ப. கோபாலகிருட்டிணன்.

★

பொது வாழ்வை மணந்தார்.

அண்ணாபேர் கூறிடிலோ அண்ணாந்து நோக்கிடுவார்
எண்ணான்(கு) இரண்டொன்பான் எய்தினால்-பண்ணார்ந்த
செந்தமிழ்த்தேன் நந்தமக்குச் சேர்பானச் சொற்செல்வன்
பைந்தமிழ்த்தாய் தந்து வந்தாள் பார்.

கல்லூரி நீத்ததன் பின் காளையர் பலரும் வெட்கும்
நல்லுரை ஆசானாக நாடினன். அல்லாக் காலோ
பல்கலைக் கழகமன்ன பயன்பெறு செய்தித் தாளின்
நல்கலைத் தொகுப்பாளாக விழைந்தனன் இரண்டும்இன்றேல்

தன்னல மற்றதூய பொதுப்பணி செய்தல் வேண்டும்
என்னவே எண்ணினான்; பின்னிரண்டையும் எய்திப் பின்னர்
முன்னதும் முடித்தான்; ஆனால் முடங்கி ஓர்இடத்தில் அல்ல—
தென்னகம் முழுதும் சென்று சொரிந்தனன் தமிழ்ச் செந்தேனை.

—மா. பொ. இராமச்சந்திரன்.

சிந்தனைக்கு விருந்து தந்தார்.

நெற்றியில் அறிவைத் தேக்கி
நெஞ்சத்தில் வீரம் தேக்கி
வற்றாத நாவில் நாளும்
வளமூறும் கருத்தைத் தேக்கி,
சுற்றாமல் சுற்றும் கண்ணில்
துடிப்பினைத் தேக்கி, மண்ணில்
கற்றாரும் போற்றும் வண்ணம்
காண்பவர், ஒருவர் அண்ணா!

"ஆரடா, கீழோன்" என்ற
ஆரிய மாயைப் போக்கை
வேரொடு துணித்தார்! வெற்றி
வித்தினை இட்டார்! மானப்
போருக்குத் தலைமை தாங்கிப்
புறப்பட்டார்! இந்த நாட்டில்
"நேரு"க்கு நேராய் நின்றார்!
நெகிழாத புகழைச் சேர்த்தார்!

இவரைப்போல் தலைவர் நாட்டில்
இதுவரை பிறந்த தில்லை!
இவரைப்போல் தலைவர் நாட்டில்
இனிமேலும் பிறக்க மாட்டார்!
இவர்தானே திராவிடத் தின்
எழுச்சிக்கு வால்டேர்! மற்றும்
இவர்தானே வைதீ கத்தை
எதிர்த்திட்ட எமிலி சோலா!

என்னாடு வாழ்க வென்ற
இனக்குரல் உயர்த்தி யன்று
பொன்னான மாசே துங்கும்
புகழ்பூத்த கமால்பா ஷாவும்
தன்னாட்டை உயர்த்தி னார்கள்!
தானுமவ் வழியே அண்ணா
"என்னாடு வாழ்க" வென்றார்;
எழில்திரா விடமும் வாழும்!

அன்னவர் தலைய சைத்தால்
ஆயிரம் படைகள் கூடும்!
அன்னவர் நாவ சைத்தால்
அணுவெலாம் வீரம் பாடும்!
அன்னவர் கண்ண சைத்தால்
ஆதிக்கம் அதிர்ந்தே ஆடும்!
அன்னவர் விரல சைத்தால்
அடுபகை நடுங்கி யோடும்!

எதைச் சொல்லிமுடிப்பேன்? அண்ணா
எண்ணாத துறையே இல்லை!
கதைகளால் நாட கத்தால்
கட்டுரைத் திறத்தால் பேச்சால்
சிதைவிலாக் கருத்தை ஆக்கிச்
சிந்தனை விருந்து வைக்கும்
புதையலாம் அண்ணா நாட்டின்
புதுமுறைச் சமையற் காரர்!

—கா. வேழவேந்தன்.

★

மூன்றுக்குப் பெருமை வழங்கினார்.

முத்தமிழாம் இயலோடே இசையும் கூத்தும்;
மொழியளக்கும் இலக்கணத்தின் பகுப்பும் மூன்று!
எத்திக்கும் புகழ்வளர்த்த கடலும்; ஆங்கே
எந்தமிழர் ஆணையிட்ட அரசும் மூன்று;
நித்திலமே! தமிழ்வளர்த்த சங்கம், வாழ்க்கை
நீதிதரும் வள்ளுவத்தின் பகுப்பும் மூன்று;
தித்திக்கும் முக்கனிபோல் எழுத்தும் மூன்றாய்;
தித்தித்தார் திராவிடத்தில் நமது அண்ணா!

வற்றாத அறிவுண்டு; தெற்குத் தென்றல்
வரலாற்றில் அவருக்கோர் இடமு முண்டு;
கற்றார்கள் நெஞ்சத்தைக் கவரும் வண்ணம்
கலைத்திறனும் அவரிடத்தில் மிக்க உண்டு;
சொற்கோவைக் கருத்துக்கள் உண்(டு) அன்னாரின்
சொல்லுக்கே தென்னாட்டில் பெருமை யுண்டு;
தற்பெருமை இல்லாதார் அவரே எங்கள்
தலைமுறைக்கே ஓர்தலைவன்! அறிஞர் அண்ணா!

—பனப்பாக்கம், கு. சீத்தா.

இதயத்தில் வாழும் கலைஞன்



கௌதமனுடன்...



பரிமளத்துடன்...



இப்படி உள்ள அண்ணாதான்...

மதத்துறையின் தீமை களையும்...

சுரண்டும் மேட்டுக்குடியினரையும்...

ஈடு இணையில்லாத தலைவன்.

...எம். ஏ. பட்டம் பெற்ற அன்று பட்டதாரி உடையுடன்.



சென்னையில் 1938 வரை அண்ணா தங்கசாலைத் தெருவில் உள்ள இவ்வீட்டில்தான் குடியிருந்தார்கள்.



சென்னையில் 1938-க்குப் பின் சில காலம் கருப்பண்ண முதலி தெருவிலுள்ள இந்த வீட்டில் குடியிருந்தார்கள். இது அவர்களின் மாமனார் வீடு.



...நடிப்பின்மூலம் காட்டி, நாட்டு மக்கள் இன்னிலைக்கு ஆளாகலாமா என்று கேட்டார்.



சென்னை-நுங்கம்பாக்கத்தில் தற்போது அண்ணா அவர்கள் வாழும் "தாயகம்".

நீதிநெறிச் செல்வர் வாழ்க.

"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்
அதனால், நமரெனக் கோல் கோடாது
பிறரெனக் குணங் கொல்லாது
ஞாயிற்றன்ன வெந்திற லாண்மையும்
திங்களன்ன தண்பெருஞ் சாயலும்
வானத்தன்ன வண்மையு மூன்றும்
உடையை யாகி இல்லோர் கையற
நீநீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே.

★

சான்றோர் செய்த நன்றுண் டாயின்
இமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே.

★

தண்டா வீகைத் தகைமாண் அண்ணா
தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெருமநீ நிலமிசை யானே."

—புறநானூறு.

எட்டுத் தொகையுள் எட்டாவதாகிய புறநானூற்றை, எட்டாத தூரத்தில் வைத்திருப்பதே நலம் என்று நீண்டகாலம் நினைத்ததுண்டு. புலவர்கள் என்றாலே ஓர் அச்ச உணர்ச்சி தோன்றியதே இதற்குக் காரணம். அதுவும், பழம் புலவர்கள் என்றால் இவ்வச்சம் மிகுந்து கொண்டே வந்தது. மேலும், சங்ககாலப் பழம்பெரும் புலவர்களோ இடையறாத் தொடர் நினைவாகப் பேரச்சத்தை ஏற்படுத்தினார்கள். இப்பேரச்சத்தையொட்டி, புறநானூற்றை அறிவாற்றலுக்கும், ஆராய்ச்சிப் பயனுக்கும் புறம்பாக வைக்கவேண்டிய சிறந்த நூல என்ற எண்ணம் விடாத துணையாகத் தொடர்ந்துகொண்டே இருந்தது.

தமிழ் மாநிலத்தில் மக்களுக்குப் புத்துயிரும் பகுத்தறிவும் ஊட்டிய நீதிநெறி இயக்கம் தோன்றியபோது, உறுதுணை எனக் கருதப்பட்டு பின்னர் நீங்கிய பல பிணைகளுள் இதுவும் ஒன்றாகும். இதன் பயனாக, புறநானூற்றுச் செய்யுட்களில் சில, நினைவுட்பதியும் செயலில் ஈடுபட நேர்ந்தது. அவைகளில் வாழ்த்துரை வழங்கும் பகுதிகள் மனத்திற்குத் தனிப்பட்ட மகிழ்ச்சியை அளித்தன.

நீண்டகால நண்பரும் அரசியல் சமுதாயச் சீர்திருத்தத் துறை முதலியவற்றில் உடன்பிறப்பாளருமான அறிஞர் அண்ணா அவர்களின் ஐம்பதாவது ஆண்டு விழாத் "தென்றல்" மலருக்கு எழுதும் வாய்ப்புத் தோன்றியபோது, இப்பகுதிகள் நினைவின்முன் நடனமாடின. அவையே, இவ்வாழ்த்துரையின் தலைப்பாக அமைவது பொருத்தமெனத் தோன்றியது.

மூன்று செய்யுட் பகுதிகளைத் தொடர்பாகச் சேர்த்து, அண்ணா என்ற சொல்லை இறுதிப்பகுதியில் அமைத்திருப்பது இப்பொருத்தம் நிறைவுற்றிருக்க வேண்டும் என்ற எண்ணத்தால்தான்.

வழிகாட்டியாகவும், இன்றும் வியந்து மகிழும் பெரும்புகழும் குன்றாப் பண்பும் நிறைந்த திராவிட சமுதாயக் கொள்கைகள் என்றும் அழியாத தன்மையில் வேரூன்றி நிலைபெற்று விளங்குவதற்குப் பெருந்தொண்டு செய்த அறிஞர் பெருமக்கள் பலர்; செய்துவருபவர்களும் பலர். அவர்களுள் முன்னணிச் சிறப்பும் தலைமையும் தாங்கி வருபவர் நமது அண்ணா ஆவர். அவருடைய ஐம்பதாவது ஆண்டு விழாவன்று, மேலும் ஐம்பதாண்டு அவர் வாழ்ந்து பெருந்தொண்டு புரிய வேண்டும் எற்று வாழ்த்துக் கூறநினைத்த போது, புறநானூற்று வாழ்த்துரைகள் முன்வந்து போட்டியிட்டன. ஐம்பதும் நானூறும் போட்டியிட்டால், மக்களாட்சி முறையின்படிதானே வெற்றியின் இயல்பு அமையும்?

திராவிட மாநிலத்தில், திராவிடப் பண்பாடு நிலையான வெற்றியுற வேண்டுமென்பதே திராவிட மக்களின் உள்ளக்கிடக்கை. இவ்வுள்ளக் கிடக்கை வெளிப்புறச் செயல் வெற்றி காண்பதற்கு உறுதிச் சான்றுகள் சில கிடைத்துள்ளன; மேலும் பல கிடைக்க வேண்டும்.

இதற்கு அறிஞர் அண்ணா நீடூழி காலம் வாழ வேண்டும்; ஞாயிற்றைப் போன்ற வெய்ய வீரமும், மழையைப்போன்ற வண்மையும், சான்றோரின் நல்வினைப் பயன்போன்ற மகிழ்ச்சியும் ஒருங்கே கொண்ட நீதி நெறிச் செல்வர், புறநானூற்றுப் புலவர் பெருமக்கள் வாழ்த்தியவாறு, பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்ந்து, சாதி சமயங்கடந்த அறநெறிக் கோட்பாட்டாளர்களின் குறிக்கோள் நிறைவுறுவதற்குப் பெருந்துணை செய்ய வேண்டுமென்பது, திராவிடப் பெருமக்களின் வாழ்த்துரையாகும்,

—டி. ஏ. வி. நாதன் பி. ஏ., பி. எல்.

அந்த நாளில்... நமது குடும்பம்.



ஜின்னா அவர்களைக் காண, தந்தை பெரியார் அவர்கள் வடநாடு சென்றபோது, பம்பாயில் வாழ்ந்த தமிழர் ஒருவர் பம்பாயில் பெரியார்க்கும் உடன் வந்தவர்கட்கும் வரவேற்பளித்த காட்சி இது.

உட்கார்ந்திருப்போர்: இன்றையத் திருவாசகமணி திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் ஜஸ்டிஸ் "தமிழ்நாடு" ஆகிய ஏடுகளில் ஆசிரியராய் பணியாற்றிய திரு. டி. ஏ. வி. நாதன், தந்தை பெரியார், "சண்டே அப்சர்வர்" திரு. பாலசுப்பிரமணியம், அறிஞர் அண்ணா.

நிற்போர்: வரவேற்பளித்த தமிழர், திருவாரூர் திரு. டி. என். இராமன், சென்னை "பஞ்சு."

"பாவையின் பயணம்."

கதையுலகில் தனி வழி கண்டார்! தமிழுலகில் பெரும்புகழ் கொண்டார்! சிந்தனையில் புதுமை; வெந்தணலின் சூடு! காலமும் அறிவும் காட்டும் கண்ணாடி! பின்வரும் பரம்பரைக்கு ஒரு முன்னோடி!

"புரட்சி ஓங்குக!" என்று கூறி விட்டுச் சந்துமுனைகளில் பதுங்கிக் கொள்ளும் கோழைத்தன்மையல்ல புரட்சியாளனின் உள்ளம். தாழ்ந்த—தாழ்வுபடுத்திய மக்களை, தன் எழுத்தால், எண்ணத்தால், பேச்சால், இலக்கியத்தால், கலையால், அரசியலால் தட்டி எழுப்புபவன் அவன். "பழங்காலத்தில் நாம் இருந்த நிலை என்ன? இன்றுள்ள நிலை என்ன? இந்நிலை ஏன் ஏற்பட்டது? எவ்வாறு ஏற்பட்டது?" என்ற வினாக்களைத் தொகுத்துச் சிந்திக்கத் தூண்டுபவனே உண்மைப் புரட்சிக்காரன்.

இடைக்காலத்தவரால் புகுத்தப்பட்ட விதிமுறைகள், கட்டுப்பாடுகள், மூடக்கொள்கைகள், போலித்தன்மைகள் பல. இவற்றை நெஞ்சுறுதியோடு உடைத்தெறிந்து "இவை யாவும் கவைக்குதவாதவை மக்களுக்கு இழிவு ஏற்படுத்துபவை!" என்று தன்னெஞ்சை உயர்த்தி வீரக்கனலுடன் எடுத்தியம்பும் உண்மை வீரனே புரட்சிக்காரன்.

நாட்டிலே சார்ந்துவிட்ட கொடுமைகளைக் களைய வீரர்கள் வாள், வேல்களைத் தூக்கிக்கொண்டு களம்புகுவர். அதுபோல அண்ணா அவர்கள் சமுதாயத்திலே புரையோடிச் சார்ந்துவிட்ட சாதிச்சழக்குகளையும், ஆண்டான்-அடிமை-உயர்ந்தோன்-தாழ்ந்தோன் - என்ற கொடுமைகளையும் அழிக்க, இருந்த இடம் தெரியாமல் ஒழிக்கத் தன் ஆயுதமான பேனாவைத் தூக்கிக்கொண்டு களம் புகுந்தார்; சமூகத்தின் நடைமுறைகளைக் காணுகிறார். அந்தச் சமூகக் களத்திலே தேர்ந்தெடுத்த போராட்டம்தான் அவருடைய எழுத்தோவியங்களுள் ஒன்றான "பாவையின் பயணம்" என்பது. இது நாடகத் தொடர்.

அவருடைய இந்த எழுத்துக்கள் வேடிக்கை, விளையாட்டுகளைக் காட்டுபவையல்ல. விதியே இதுதான் என்று எண்ணும் மாந்தருள் நடைபெற்றுவந்த கோரத்தாண்டவங்களைச் சுட்டிக்காட்டி "இது நடக்கலாமா? இதுதான் அறமா? இதுதான் நீதியா?" என்று கதை மாந்தர்கள் வாயிலாக வாதிடுகிறார், அவருக்கே தனியாக அமைந்துவிட்ட வாதிடும் தன்மையோடு.

நீதி மன்றத்தலைவர் வந்தனம் பி. ஏ. பி. எல்., அமர்ந்திருக்கிறார். நான்காம் கட்டத்தில் வனஜா பி. ஏ. நிற்கிறாள். அவள் தன் கணவன் தேவன் எம். பி., பி எஸ்., தன்னை நிராகரித்துத் துரோகமிழைத்து, நர்ஸ் நிம்மியுடன் காமக்களியாட்டம் நடத்துவதாகவும், குடித்துக் கும்மாளமடித்துக் குடும்பச் சொத்தைப் பாழாக்கி வருவதாகவும் வழக்குத் தொடுத்து, தன் திருமணத்தைத் தள்ளுபடி செய்து தனக்கு விடுதலை கோரி நிற்கிறாள்.

ஒரு குடும்ப நிலையைப் பலரறியச் செய்ய வேண்டாம் என்ற உயர் நோக்கோடு வழக்குமன்றத் தலைவர் ஒரு தனி அறையில் அவர்களிருவரையும் நிறுத்தி விசாரிக்கிறார்.

இருவருமே ஒருவரையொருவர் அலட்சியப்படுத்திப் பிரிந்து போக எண்ணுகின்றனர் என்பதை உணருகிறார். வனஜாவை அமைதிப்படுத்த நினைக்கிறார். ஆனால் அவள் வாதாடும் திறமையைக் கண்டு திகைக்கிறார். ஆண்கள், தொன்றுதொட்டுப் பெண்களை எவ்வளவு இழிவுபடுத்தி, அடிமைப்படுத்தி வந்தனர் என்பதை வனஜாவின் வாயிலாக அழகுபட எடுத்து விளக்குகிறார் அண்ணா.

"பெண்கள் திருமணத்தின் மூலம் வாழ்விலே ஒரு தோழமையை விரும்புகிறார்கள்; ஆனால் அடிமையாக இருக்கச் சம்மதித்தால் மட்டுமே அவர்களுக்குக் குடும்பத்திலே இடம் கிடைக்கிறது. மற்ற எத்தனையோ பிரச்சினைகளிலே ஓரளவுக்கேனும் நீதி நேர்மையைக் கடைப்பிடிப்பவர்கள்கூட இதில் மட்டும், அடக்கி ஆள்பவர்களாக, ஆளடிமை கொள்பவர்களாகவே இருக்கிறார்கள். தற்கொலை செய்துகொள்வது, தன்மானம் இழப்பது, தத்தளித்துக் கிடப்பது-இப்படி ஏதேனும் ஓர் நிலையில்தான் பெண்கள் தள்ளப்படுகிறார்களே தவிர, அவர்களுக்கு வாழ்வில்இன்பம்-வாழ்வில் சமத்துவம்-வாழ்வில் உரிமை தரப்படுவதில்லை; தருவதற்கான முறையில், நமது தர்மமோ, ஆட்சி முறையோ, சமுதாய அமைப்பு முறையோ இல்லை."

ஆகா! எவ்வளவு அழகான முறையில் பெண்மையின் உள்ளக் கொதிப்பை-உணர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறார், நாவன்மை படைத்த நமது அண்ணா. அதோடு நிற்கவில்லை.

"வாழ்வு தேடி, வாழ்வில் இன்பம் தேடி, பெண்கள் நீண்ட பயணம் நடத்திஇருக்கிறார்கள். பல கட்டங்களைக் கண்டிருக்கிறார்கள். எல்லாக் கட்டங்களிலும் கண்ணீரும் இரத்தமும் தான் கொட்டுகின்றன. இப்பொழுது தான் விடுதலைக் கட்டம் வந்திருக்கிறது. இது நாலாவது கட்டம். இந்த நாலாவது கட்டத்திற்கு முந்திய மூன்று கட்டங்களிலும் சட்டம் கிடையாது, பரிகாரம் அளிக்க. இழிவைத் துடைத்திட கட்டாரி அல்லது கண்ணீர்தான்! அடங்கிக் கிடப்பது அல்லது ஒழுக்கம் கெடுவது!—இவைதான் இருந்தன."

குடும்ப வாழ்வில் விருப்பு இல்லாத பெண்களுக்கு இது நாள்வரை சமூகம் அளித்து வந்த பரிசுகள்பற்றி எவ்வளவு மனம் நொந்து கூறுகிறார் அண்ணா. கட்டாரி அல்லது கண்ணீர்! அடங்கிக் கிடப்பது அல்லது ஒழுக்கம் கெடுவது! அண்ணாவின் இந்த இரு சொற்களையும் சிறிது நேரம் சிந்தித்துப் பார்த்தால், அதில் நமது நாட்டுப் பெண்மணிகளின் வரலாறே அல்லவா அடங்கிக் கிடக்கிறது. தன் கணவனால் வாழ்வில் நலம் பெறாத ஒரு பெண் துரோகம் செய்யப்பட்ட ஒருத்தி - அல்லது வெறுப்பு மனம் கொண்ட ஒரு மாது-இவர்கள் சமூகத்திற்குப் பயந்து அடங்கிக் கிடப்பதும், கண்ணீரால் படுக்கையறையைக் கழுவுவதும்-சிறிது துணிவுள்ளவளாக இருந்தால் நஞ்சையோ, தூக்குக் கயிறையோ நாடுவதும் இந்தத் தெளிவுள்ள காலத்திலும் நாம் காணுகிறோமல்லவா. இதைக் கண்டு மனம் நொந்த அண்ணா, வனஜாவின் வாயிலாக எவ்வளவு உறுதியோடு படம் பிடித்து காட்டுகிறார். இதோடு வனஜா நிற்கவில்லை. இதோ மேலும் பேசுகிறாள்.

"பெண்கள் இன்று - நேற்றல்ல, சார்! டாக்டரும், என்ஜினீயரும், வக்கீலும், கலெக்டரும், மோட்டாரும், விமானமும் உள்ள இந்த நாட்களிலே மட்டுமல்ல-அரண்மனையும் மாளிகையும், கோட்டை கொத்தளமும், கொலு மண்டபமும், ஆஸ்தான கவிஞர்களும், குல குருக்களும் இருந்து வந்த அந்தக் காலத்திலிருந்தே கொடுமைக்குஆளாகி வருகிறார்கள்"

இவ்வாறு கூறிய அண்ணா அவர்கள் நம்மை அரச மாளிகைக்கே அழைத்துக்கொண்டு போய் நிறுத்துகிறார்கள். அங்கே பாவையின் பயணம் தொடருகிறது.

அரசாளும் கிழவனை மணம் புரிந்த சித்திரப்பாவை, தன் வாழ்வின் இன்பமனைத்தையும் தன் உள்ளத்தேயடக்கி வாழ முயன்று பலனில்லாமல், கணவன் இறந்தபோது உடன்கட்டை ஏறுகிறாள். இது முதல் கட்டம்.

சித்திரப் பாவைபோலவே பொருந்தாத் திருமணம் செய்துகொண்டவள் பதுமை. அவளின் கணவன் அவளது இளமையைக் கண்டு அஞ்சி அவளை அடிமைபோலவே வைத்திருக்கிறான். காரணம், இடம் கொடுத்துவிட்டால் இடர் விளைந்துவிடுமோ என்ற பயம். பதுமையும் அடங்கி ஒடுங்கி உள்ளத்தை யடக்கி, கணவனுக்குத் தீங்கோ, தீதோ புரியாமல் வாழ்கிறாள். ஒரு நாள் விதவையாகிறாள். அவள் கணவனின் அண்ணன் மகன் பகைமுடித்தான் பட்டத்திற்கு வருகிறான். அவன் ஒரு காமலோலன். தன் சிற்றன்னையான பதுமையைப் படுக்கையறைக்கு அழைக்கிறான். அவள் கட்டாரியைத் துணைகொண்டு மடிகிறாள். இது இரண்டாவது கட்டம்.

இந்த அக்கிரமத்தை நினைத்துப் பார்த்த அண்ணா அவர்கள் பேசுகிறார்கள், பதுமையின் கடிதவாயிலாக:

"புவியோரே! பெண்களின் வாழ்வுப் பாதையைக் கண்மூடித்தனமாக அமைத்துவிடும் பெரியோர்களே! என் பாதை என்னை எங்கு கொண்டு செல்கிறது என்பதைப் பார்த்தாவது திருந்த முற்படுங்கள்!"

இதயம் நொந்து, இரத்தக் கறை உடல் எல்லாம் படிய மடிந்துகொண்டிருக்கும் பதுமை கேட்கிறாள், இவ்வாறு. இது தான் உயர்ந்த கலைஞனின் திறமை, எந்தப் பாத்திரத்தைப் படைத்தாலும் படிப்பவர்கள் நேரில் காணுவதுபோல் அமைப்பதுதான் மேலான திறமையிலும் திறமை.

— 12-ம் பக்கம் —

கொடுக்கல் - வாங்கல்!

"உலகெங்கிலும் பல மொழிகள் ஆரிய வழி மொழிகளாகக் கருதப்படுகின்றன. திராவிட இன மொழிகள் பெரும்பாலும் கண்ணுக்கெட்டிய தொலைக்குள்ளாகவே அடங்கியிருக்கின்றன. ஆனால் பல மொழிகளை உற்பத்தி செய்த ஆரிய மொழி தான்மட்டும் பாடையிலே படுத்துவிட்டது. திராவிட மொழி பெற்றுப் பெருகி வாழ்கிறது. இங்கே நான் திராவிட மொழி எனக் குறிப்பிடுவது தாய்த் தமிழையேயாகும். தாய்த் தமிழின் சொற்கள் கன்னட, கேரள, ஆந்திர மொழிகளில் அப்படியப்படியே காணப்படுகின்றன. வடமொழிச் சொற்கள் சேய் மொழிகளில் சிதைந்தும் உருமாறியும் தெளிவின்றியும் கிடக்கின்றன. இவற்றை நீங்கள் கவனித்தால், வடமொழி பிற இடங்களில் ஓடிப் போய் அடைக்கலம் புகுந்தது என்பதையும், தாய்த் தமிழ் வந்து கேட்டார்க்கு வழங்கி அமைவுற்றது என்பதையும் கண்டுகொள்ளலாம். மலை பெயர்ந்தாலும் நிலை பெயராத தமிழ், வடமொழிச் சொற்களின் துணையின்றியே, தனித்தியங்கி வந்திருக்கின்றது. கொடுக்கக்கூடிய வளம் பெற்றவன், வாங்க வேண்டிய அவசியமில்லையல்லவா?"

—இவ்வாறு அழகப்பா கல்லூரிகள் வட்டத் தமிழ் மன்றத்தில் 2-9-'59 அன்று பேசும்போது ஆசிரியர் கண்ணதாசன் குறிப்பிட்டார்.

— 6-ம் பக்கத் தொடர்ச்சி —

விந்தைச் செயலே! உண்மையை ஒளித்து அவர் உள்ளம் திறந்து பாரதிதாசன் அவர்களை மதிப்பிட்டமைக்கு அவரைப் பாராட்டத்தான் வேண்டும், தமிழகமெங்கும் பாரதிதாசன் பண்பாடி மகிழும் மக்கள் பாரதிதாசனைப் புரட்சிக் கவிஞர் அல்ல என்று சொன்னவரின் உயர் தன்மையைத் தெரிந்துகொள்ளச் செய்தமைக்காக! "இரண்டும் இரண்டும் நாலு; நாலும் நாலும் எட்டு" என்ற அபாரச் சிந்தனையைச் சொன்னபோது மாணவர்கள் "ஆகா, கண்டுபிடித்துவிட்டாரே!" என்று வாய் திறந்து விமர்சித்தார்கள்—உயர் திரு. சீவானந்தம் அவர்கள் இதனைக் கேட்டிருக்கமுடியாது. காரணம் அவர் மேடையிலே பேசிக்கொண்டிருந்தார்! மாணவர் தலைவரை அடிக்கடி வம்புக்கு இழுத்துப் பேசினார். அந்த மாபெரும் கட்சித் தலைவர், மாணவரிடையே பழக வேண்டிய நல்ல பண்பினையும் இழந்தார்!

திராவிட முன்னேற்றக் கழக மாணவர் ஒருவர் சொல்லிய சில கருத்துக்களை மறுத்துரைக்க ஒரு மாபெரும் இலக்கியச் செல்வர் கல்லூரி மேடையில் ஆடிய ஆட்டமும் கை வீச்சும் வாய் வீச்சும் மிக ரசிக்கத்தக்கவையாகவே இருந்தன. சீவானந்தம் அவர்கள் மாணவரிடையே அணுகத்தகாத வழியிலே புகுந்து பாழடித்துவிட்டார்! 'புதுமை இலக்கியம்' என்ற பொருள் உண்மையில் கல்லூரி மாணவர்களுக்கும் பழையதுதான்! இந்தத் தலைப்பினை சீவானந்தம் பேச எடுத்துக்கொண்டதற்கே காரணம், இவருடைய இலக்கியச் சரக்கினை எடை போடுவதற்காகத்தான்! இந்தத் திட்டம், பாபம் சீவானந்தம் அறிந்துகொள்ளாத ரகசியமாகிவிட்டது. 1957-ம் ஆண்டுப் பொங்கல் விழாவின்போது நம்முடைய மதிப்பிற்குரிய மனோகரன் அவர்கள் 'புதிய இலக்கியம்' என்ற தலைப்பிலே பேராசிரியர்களும் மாணவர்களும் மகிழும்வண்ணம் இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாகவே பேசி முடித்தார். அவர் உரையின்போது உலகத்து இலக்கியங்களையெல்லாம் அமெரிக்கன் கல்லூரி மேடைக்கு அழைத்து வந்து காட்டினார். 'புதிய இலக்கியம்'பற்றிய மனோகரன் பேச்சு மிக மிக வரவேற்கத்தக்கதொரு பேரிலக்கியமாகத் திகழ்ந்தது! சீவானந்தம் தன் கலைத் திறமையெல்லாம் காட்டி, கைபர் கணவாய் வழியாகக் கம்யூனிசம் வரப்போவதாக லஜபதிராய் சொன்னதை விளக்கிக்கொண்டிருந்தபோது, என் நினைவெல்லாம் அதே மேடையில் மனோகரன் வாரித்தெளித்த கருத்துக்களை எண்ணியது. கூடியிருந்த மாணவர்களில் பலருக்கும் அந்த நினைவே இருந்திருக்க வேண்டும்—இல்லையென்றால் மாணவர்கள் கை தட்டி, சீவாவை உட்கார வைக்க முயன்றிருக்கமாட்டார்கள்! இந்த நேரத்திலேதான் 'சீவா' சொன்னார். பாரதிதாசனும் பாரதியார் சொல்லாத பல புதிய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார் என்று குறிப்பிட்டார்! ரசிக்கத்தக்க அழகு மொழிகள் இருப்பதாகவும் தன் எண்ணத்திற்குப் புறம்பாகப் பேசிக் காட்டினார்! கம்பன், அவனுடைய பாட்டன், வள்ளுவன், அவனுடைய முப்பாட்டன், இளங்கோ, அவனுடைய பாட்டனுக்குப் பாட்டன் என்றெல்லாம் வயிற்றெரிச்சலிலே வெளி வந்த வார்த்தைகளைக் கொட்டி அமெரிக்கன் கல்லூரிப் பேரவையின் அழகு தமிழ் மன்றத்தை, சீவா ஆபாசப் படுத்தியிருக்கத் தேவையில்லை!

தலை சிறந்த பேச்சாளர், கம்யூனிஸ்ட்களுக்குக் கிடைத்திருக்கும் கலைக் குழுவின் தலைவர், அகில இந்திய எழுத்தாளரின் சென்னை மாநாட்டுச் செயற்குழுவிலே இடம் பெற்றுள்ள சீவானந்தம் இனிமேலாவது இந்தக் குறைகளைக் களைய வேண்டும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொன்னான கருத்துக்களை இதயத்திலே நிறைத்துவிட்ட ஒருவன் ஒரு ஊரிலே இருந்தால் போதும் அவன் அந்த ஊரை மட்டுமல்ல—உலகத்தையே வென்று காட்டுவான் தன் சொல்லாலே என்பது மனோகரன் மணிமொழி! மாணவர் தலைவர் உரை நடையில் புதுமைகளைக் காட்டிய அறிஞர் அண்ணாவின் புதுமை இலக்கியங்களைப்பற்றியும் தன் முன்னுரையிலே குறிப்பிட்டார். அண்ணாவின் ஏடுகளைப்பற்றியும் எழுத்தோவியங்களைப்பற்றியும் விளக்குகையில் 'ரோமாபுரி ராணிகள்' என்னும் ஒரு பேரரசின் வீழ்ச்சியினைத் தெரிவிக்கும் புத்தகத்தை நினைவூட்டினார். இதனைச் 'சீவா' தன் பேச்சின் முக்கியக் கருப் பொருளாகக் கொண்டு, "அண்ணாத்துரையின் புதுமை இலக்கியம் இப்படியா இருக்கவேண்டும்" என ஏளனக் குரலிலே கேட்டார். அண்ணாவுக்கும் தனக்குமுள்ள சொந்தத்தையும் கொஞ்சம் அதிகமாகவே விளம்பரப்படுத்திக்கொண்டார்! 'ரோமாபுரி ராணிகள்' என்ற புத்தகம் பிறநாட்டு வரலாறுகள் தெரிய வேண்டும் என்று பாரதியார் சொல்லியதை, அதனை எடுத்துச் சொல்லும் புதிய பாகவதர் சீவா உணர்வதைப் போன்ற செயலிலே, ஒருவகையாகும். இதனைத் தெரியாமல் அண்ணாத்துரை புதுமை இலக்கியக் கர்த்தா என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது எனக் கூறியது சரியா? மறுமொழி வழங்கிய வேளையில் மாணவர் தலைவர் இந்திரசித் இதனைச் 'சீவா' நன்கு கேட்கும் வகையில் விளக்கினார். "பொதுவுடமைக் கொள்கை வளர்ப்போம்; புனித மோடதை எங்கள் உயிரென்று காப்போம்" என்ற கவிஞரின் வரிகளையும் நினைவூட்டி, சீவானந்தம் தடுமாறி விழுந்த பள்ளத்தினை நிரப்பிக் காட்டினார்! இலக்கிய மேதை தன்னுடைய வலிவற்ற வாதங்களைத் தாங்கிப் பிடிக்கத் தாகூரிடத்திலே தஞ்சமடைந்தார். இடையிடையே ஆங்கில வார்த்தைகளைச் சேர்த்துத் தனக்கும் ஆங்கிலம் தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ள முயன்றார்! மாணவர் மன்றமும் மன்றத் தலைவரும் மறுப்புரை வழங்கினார்கள். மதிப்பிழந்த இலக்கிய மேதையவர்கள் கேட்க விரும்பவில்லை. எது வேண்டுமானாலும் பேசிக்கொள்ளட்டும் நான் போகிறேன் என்ற முறையில் துடித்தெழுந்தார். தலைவர் பேசி முடிப்பதற்கு முன்பே மேடையை விட்டே ஓடிவிட்டார்! அன்று நேரமில்லை என்று சென்றுவிட்டச் சீவானந்தம், தன் கல்லூரிப் பேச்சினை விரிவாக்கி பாரதிதாசன், அறிஞர் அண்ணா பற்றிய அவதூறுகளை, புதுமை இலக்கியச் செறிவில்லை என்ற பொய்யுரைகளை, 'ஜனசக்தி'யில் எழுதி நிலை நாட்டத் தயாரா என்பதனைக் கேட்கவே இந்தச் செய்திகளைத் தமிழகத்திற்குத் தந்தேன்! இலக்கியச் சீவா அவர்களே! நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? ★

—11-ம் பக்கத் தொடர்ச்சி—

இதைப்போலவே மணிவர்மன் என்ற அரசனை சந்திரபாலா என்ற மாது மணந்தாள். அவளும் வாழ்வில் நலம் காணமுடியாதவளாகிறாள். ஆனால் அவள் வெந்தணலையோ, கட்டாரியையோ துணைகொள்ளவில்லை. தன்னைத் திருமணம் செய்துகொண்ட பொருந்தாக் கணவனை விட்டு, படைத்தலைவனைக் காதலிக்கிறாள்; ஆடுகிறாள்; பாடுகிறாள். அதைக் கண்டு அரசன் குமுறுகிறான். மருத்துவரைக் கூப்பிட்டு மனைவிக்கு நஞ்சு கொடுத்துக் கொல்லும்படி, பணிக்கிறான். அதைக் கேட்டுக் கொண்டே வந்த சந்திரபாலா கை கொட்டி நகைக்கிறாள். மருத்துவர், தனது கடைப்பார்வைக்கும் இடைநெளிவிற்கும் அடிபணிந்தார் என்று கூறி, "உம்முடைய கட்டளை என்னிடம் செல்லாது" என்று நகைத்து அங்குள்ள தூண், துரும்பு, ஆள், அம்பு யாவையும் தனது சிரிப்புக்கு, தனது காதலுக்கு அடங்கியவை என்றும், அனைவருமே தனது காதலர்கள் என்று கூசாமல் கூறி, தன் கணவன் வெட்கி அஞ்சி அணு அணுவாகச் சாகும்வரை வஞ்சம் புரிகிறாள். இது மூன்றாவது கட்டம்.

இதைக் கண்டு ஊர் சிரிக்கிறது. அந்த ஊர் மக்களைப் பார்த்து சந்திரபாலாவின் மூலமாகவே தன் வெறுப்பைக் காட்டுகிறார் அண்ணா:

"ஊர் மக்கள்! எவ்வளவு நியாய அநியாயமாக நடந்துகொள்கிறார்கள் இந்த மக்கள். என் கண்ணீருக்குக் காரணம் கேட்டார்களா? தொண்டு கிழவன் துடியிடையை, மனைவியாக்கிக் கொள்வது அநீதி என்று பேசிய யோக்கியன் யார்? ஏன் என்று கேட்டனரா? ஆகுமா இந்த அக்கிரமம் என்று கேட்டுத் தடுத்தனரா? பெண்பாவம் கூடாது என்று இதோபதேசம் செய்தனரா? 'ஒருவன் கிழவனாக, குரூபியாக இருக்கலாம்; என்றாலும், அவருடைய பாதசேவையே உனக்கு சகல சௌபாக்கியமும் தரவல்லது. நீங்கள் கணவன் மனைவியானது தேவனருளால். ஆகவே, பத்தினியாய், உத்தமியாய் வாழவேண்டும், அதுவே தர்மம்!' என்றெல்லாம் பேசுகிறார்கள். காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்டதே இன்பம் என்பதை எடுத்துச் சொன்னார்களா?"

அண்ணாவின் நெஞ்சக் குமுறல் இதில் எதிரொலித்திருக்கிறது. இந்த நாட்டு மக்கள் பிறர் வாழ்வில் நிகழும் குறைகளைச் சிறிதளவேனும் அறிந்து கொண்டார்களேயானால்...

அவர்கள் கிளப்பும் அலர், கெக்கலிப்பு-இழிதன்மை முதலியவை, அந்தக் குடும்பத்தையே சில வேளைகளில் நாசமாக்குகின்றன என்பதை உணர்ந்து, அநீதியை அநீதி என்று எடுத்துரைத்த யோக்கியன் யார் என்று ஊக்கத்துடன்-கோபத்துடன் கேட்கிறார்.

இவை யாவையும் எடுத்துக் காட்டிய வனஜா கூறுகிறாள்:

"அறிவு சால் பெரியீர்!

...இதுபோன்ற பொருந்தாத் திருமணம், காதலற்ற கூட்டுறவு இவைகளால் ஆடவருக்கும் ஆரணங்குக்கும் வாழ்வில் பொருத்தம் அமையவில்லை; ஒருவரையொருவர் வஞ்சிக்கிறார்கள்; ஆதிக்க வெறி கொண்டு கொடுமைப் படுத்துகிறார்கள். துரோகம் இழைக்கிறார்கள் என்றால், பாவைபோலப் பரிதாப மரணமடையத் தேவையில்லை; பதுமைபோலக் கட்டாரிக்கு இரையாகத் தேவையில்லை; சந்திரபாலாபோலச் சண்டாளியாகத் தேவையில்லை. சட்டப்படி பரிகாரம் தேடிக்கொள்ளும் கட்டம் வந்திருக்கிறது. விவாக விடுதலைதான், விபரீதப் போக்கிலே நடந்துகொள்ளும் சதி-பதி உறவு இனியும் இருத்தல் கூடாது என்பதை எடுத்துக் காட்டும் எச்சரிக்கை. தேவன் திருத்தப்பட வேண்டியதுமட்டுமல்ல முக்கியம். எந்த ஆடவனும் தேவனாகக்கூடாது என்பதே ஆசை."

சமுதாயக் கொடுமைகளுக்குப் பயந்து அஞ்சி அஞ்சிச் சாகும் எண்ணற்ற பெண்மணிகளுக்கு அண்ணா அவர்கள் இதன் மூலம் - தனது புரட்சி எண்ணத்தின்மூலம் வழி காட்டுகிறார். கொடுமைநிறைந்த சமுதாயத்தின் பிரதிநிதியாகத் தேவனை உருவாக்கிக் காட்டி, அதிலிருந்து விடுதலை பெறப் பெண் குலத்தின் பிரதிநிதியாக வனஜாவையும் நிறுத்தி அவள் மூலமாகவே புரட்சிக் கருத்துக்களை சமுதாயத்தின் மேலே கணைகளாகத் தொடுக்கிறார்.

இதுபோன்ற அண்ணாவின் கதைகள் தனி மனிதர்களின் கதைகளல்ல; மனிதப் பண்புகளின் கதைகள். முன்காலமாக இருந்திருந்தால் நமக்குக் கொடுத்து வைத்தது அவ்வளவுதான் என்று அடங்கி இருப்பாள் வனஜா. இன்றோ காலம் மாறிவிட்டது. அறிவு வளர்ந்துவிட்டது. எதையும் பகுத்து அறிந்து செயல்படும் நிலை உண்டாகிவிட்டது. வெளியுலகத் தொடர்பு வளர்ந்து விட்டது. இது சாதாரணமான மாற்றமல்ல. மக்களிடையே வளர்ந்துள்ள மாபெரும் புரட்சித் தன்மையையே இது காட்டுகிறது. எண்ணமும் நினைப்பும் திருந்தினால் எல்லாம் திருந்தும் என்ற மனப் பக்குவம் ஏற்பட்டுவிட்டது. இந்தப் பக்குவம் ஏற்பட அண்ணா அவர்கள் செய்த தொண்டு இருக்கிறதே, அது ஒரு மாபெரும் புரட்சித் தொண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது. இழந்த இழப்பை மீண்டும் அடைய வேண்டும் என்ற தீராத வெறியால் அண்ணா "ஒரு புரட்சிக்கார"ராகிறார்.

வாழ்க, அண்ணா! வெல்க, அவர்தம் புரட்சி!

—கருணை.

ராஜபார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்
திண்டுக்கல்ரோடு, மதுரை.

தென்னகத்தின் பேச்சாளர்!

தலைவர் - அந்த வார்த்தைக்கே பெருமையையும் புகழையும் தேடித் தந்தவர் அவர். தொண்டரை மதிக்கும் தனித்தன்மை அவருக்குண்டு. படித்துப் பட்டம் பெற்று, பொது வாழ்வில் தொண்டராகி, தோழர், தளபதி, அறிஞர், தலைவர் என உயர்ந்தவர், அவர்!

தன்மான இயக்கம் அவர் மனத்தை ஈர்த்தது. அறிவுத் தின்மையால், தொண்டு மனப்பான்மையால் தலைவருக்குத் துணையானார். கொள்கை வைரம் பாய்ந்த அவர் - தாயகத்தின் நிலை உணர்ந்தார். சமூக அநீதிகளைக் கண்டார். தாய்மொழியின் கோலம் கண்டார்.

அறியாமையில் துயிலும் மக்களைத் தட்டி எழுப்புவது எங்ஙனம்? மனக் குகையில் மோதியது இக்குரல். 'கற்றலினும் கேட்டலே நன்று' என்று முழங்கும் முதுமொழி எதிரொலித்தது.

பேச்சுமேடை அவர் இதயத்தை இழுத்தது. அழகுத் தமிழிலே அடுக்கடுக்கான வார்த்தைகளால், அரும் பெரும் சிக்கல்களை எல்லாம் - வெகு எளிதாக விளக்கலானார். எதுகை மோனைகளும், அடுக்குத் தொடர்களும், இரட்டைக் கிளவிகளும் - அவரின் பேச்சில் இடம் பெற்றன. 'பிரசங்க சபா' அவரின் பேச்சு மேடையானது. ஆயிரமாயிரம் உள்ளங்களை அவர் கொள்ளைகொண்டார். கழகத்திற்குப் பெருவாரியான மக்களைக் கூட்டிவந்து சேர்த்தார்.

சமுதாயச் சீர்திருத்தத்திற்கும் பொருளாதாரப் புரட்சிக்கும் விடுதலை வேட்கைக்கும், தன் பேச்சின்மூலம் கருத்துப் புரட்சி செய்தார்.

எழுத்து-சிந்தனையாளரான அவரின் எண்ணங்களில் உயிர்பெற்றது. கொள்கை விளக்கங்கள் - புதுமை நடையில் எழுதப்பெற்றன. மாற்றாரும் அவரின் நடையை போற்றினர். தமிழுக்கே புதுமையான வழியைக் காண்பித்தார். புதுமையான எழுத்தாளர் வரிசையே அவர் பின்னே போகலாயிற்று.

கேட்க இனிக்கும், பேச்சு! படிக்க மணக்கும், எழுத்து! கண்டு களிக்க, இவை இரண்டும் கலந்த நடிப்பு வேண்டும்.

மனித வாழ்வின் வளைவு நெளிவுகளை, சமுதாயச் சிக்கல்களை உருவகம் செய்து, உயிரூட்டி நாடகமாக்கினார். நாட்டோர்க்கு நடித்துக் காண்பித்தார். தமிழகத்து இலக்கிய வானில் மங்காத நிலவானார். பெர்னாட்ஷாவையும், இப்சனையும், வேர்ட்ஸ்வொர்த்தையும் கூட்டிவந்து-இவர்கள்தான் அண்ணா எனப் போற்றிப் புகழ்ந்தனர்.

பெரும் ஆற்றலும், பெருந்தன்மையும் மிகுந்தவர் அறிஞர் அண்ணா. சொல்லின் செல்வர் திரு. சம்பத் அவர்கள் இரண்டாவது மாநில மாநாட்டில் சொன்னார்கள்: "மகனே என்றழைக்க தந்தை இல்லாவிட்டாலும்; தம்பி என்றழைக்க அண்ணா இருக்கிறார்."—இந்தச் சொற்களில் ததும்பி வடியும் பற்றும் பாசமும் நம் நெஞ்சங்களைச் சிலிர்க்க வைக்கின்றன.

பெருந்தகை அண்ணா அவர்கள், மாநாட்டிற்குத் தலைமை தாங்க இருந்த பொதுச்செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களை இங்ஙனம் விளித்தார்கள்: "தம்பி வா! தலைமை ஏற்க வா! உன் ஆணைக்குத் தாள்பணிந்து நடக்கிறோம்!" இந்த வார்த்தைகள் இலட்சக்கணக்கான நெஞ்சங்களை விம்ம வைத்தன.

மேதையின் சொற்களில்தான் எத்தனை ஆற்றல்! மனித குலமே வியந்தது. உலகப் பெருந்தலைவர்கள் தனக்குப் பின்னே ஒருவரைத்தான் வாரிசாகக் காண்பிப்பார்கள். இந்த மாமேதையோ - தனக்குப் பின்னே பெரும் அணிவகுப்பையே அணிவகுத்து நிறுத்தியுள்ளார். தமிழகத்தின் வருங்காலத்தை நிர்ணயிப்பவர்கள்-அவரின் தம்பிகள்தான். எங்கும், எதிலும் அவரின் குரல்தான். அவர் தொட்ட இடமெல்லாம் சிறக்கிறது.

அன்பும் இரக்கமும் பின்னிக் கிடக்கும் அவர் நெஞ்சத்தில். எதிரியையும் நண்பனாக மதிக்கும் தனிப் பண்பு, தொண்டையும் 'தாமாக' மதிக்கும் தனிக்குணம், தொண்டுக்கு முதலிடம் தரும் உயர்தன்மை, அறத்தில் அழியாத உறுதியுடைய கொள்கையுள்ளம் முதலியன அவர் சொத்துக்கள்!

மக்களாட்சி அதன் பெயருக்கு களங்கமுண்டாக்காமல், 'கண்ணியம், கடமை, கட்டுப்பாடு'' எனும் பெருமைகளைத் தேடித்தந்த வள்ளல்! சொல்வதைச் செய்யும் செயல்முறை அண்ணாவுடன் பிறந்தது.

தமிழுக்கு, தமிழருக்கு, தமிழகத்திற்கு-ஏன் உலகத்திற்கே தொண்டு செய்யப் பிறந்தவர் அண்ணா! வசவுகளைத் தாங்கி, தாங்கி வளரும் பெருந்தகை அவர்! மாற்றாரைத் தூற்றியறியாத தூய்மையாளர் அவர்! பிறந்த இடத்தையும் பெற்ற செல்வத்தையும் போற்றிக் காத்துவரும் குணக்குன்று.

★

வானம் நீலப்பூத்து இருந்தது. தென்றல் குளுமையாக வீசியது. அதைத் தொடர்ந்து தெற்கு வானத்திலே கருமுகில் கூட்டம் தெரிந்தது. எனினும் வானம் நீலமாகவே தெரிந்தது. வேலூர்க் கோட்டை வெளியில் இராசாசி பூங்கா அருகில் மக்கள் கூட்டம் கடலெனக் குழுமியிருந்தது.

"இதுவரையில் இவ்வளவு பெரிய கூட்டம் யாருக்கும் கூடியதில்லை" என்று எல்லோரும் தனக்கருகிலிருந்தவரிடம் கூறிக்கொண்டிருந்தனர். மணி ஆறு எப்பொழுது ஆகும் என்று ஒவ்வொரு உள்ளமும் டிக்... டிக்...என்று அடித்துக்கொண்டிருந்தது. நகராண்மைக் கழக ஆணையாளர், "அண்ணா அவர்கள் சரியாக ஆறு மணிக்குத்தான் வருவார்கள்" என்று அறிவித்தபடியேயிருந்தார். மணி ஆறு என்பதற்கு அறிகுறியாக அண்ணா அவர்கள் கூட்டத்திற்கு வந்தார்கள்.

நிலவைக் கண்டு எழும் கடலலைகளைப்போல, அமர்ந்திருந்த கூட்டம் அண்ணாவின் வருகையைக் கண்டதும் ஆரவாரித்து எழுந்தது. அண்ணா மேடையில் அமர்ந்தார். கூட்டமும் அமர்ந்தது. அண்ணல் காந்தி சிலையை திறக்க எழுந்தார் அண்ணா - மக்கள் கூட்டமும் எழுந்தது, எழுச்சிக்குரலுடன். இராசாசி பூங்காவினுள் நுழைந்து அழகு மணி மண்டபத்தின் படிகளில் ஆணையாளரும், நகரத் தலைவரும் இருபுறமும் வர, அண்ணா அவர்கள் ஏறினார்கள். மக்களின் மகிழ்ச்சி பன்மடங்கு பெருகி வழிந்தது.

அப்பொழுதுதான் "மாநிலக் கழக"த்தின் மாபெரும் செயலாளரும் தொண்டர்களுமான ஐந்து பேர்கள், அண்ணாவின் வருகையை எதிர்த்து, அவர்கள் மொழிப்படி 'கோஷித்துக் கொண்டு' போனார்கள். மக்கள் சிரித்தனர். மேகங்கள் நகைத்தன. கோட்டை வெளி கெக்கலித்தது. அவர்கள் நடந்து சென்ற பாதை வருந்தியது, அந்த "மாபெரும் படையின்" பண்பை நினைத்து...! இறுதியாக அண்ணா திறந்த காந்தியார் சிலை கல... கல... வென்று நகைத்தது. எதிரிகள் வதைந்தனர். நைந்து குலைந்தனர். முகங்களில் ஈயாடவில்லை. போலீஸ் லாரி ஐவரையும் விடாமல் அழைத்துச் சென்றது.

அண்ணா அவர்கள் பேசலானார்கள். பெருந்தன்மையும், மேதைத் தன்மையும் ஒளி கொட்டின. "நான் காந்தி சிலையைத் திறக்கக் கூடாது என்று காங்கிரஸ்காரர்கள் சொன்னார்களாம். ஆங்கிலேய நாட்டுத் தூதுவர் டெல்லி வந்ததும் மலர் தூவி, காந்தி சமாதிக்கு அஞ்சலி செலுத்துகிறார். அதைக் கேட்டு நாமும் பரவசப்படுகிறோம். காங்கிரஸ்காரர்கள் பரவசப்படுகிறார்கள். வெளிநாட்டான்; நமக்கு சுதந்திரம் கொடுக்கக்கூடாது என்பதிலே பங்கு பெற்றவன், காந்தீயை அஞ்சலி செய்யும்பொழுது, அவனைப்பற்றி வானளாவப் புகழும் காங்கிரஸ் நண்பர்கள் நான் திறப்பதை ஏன் எதிர்க்க வேண்டும்?" என்றார் அண்ணா. கையொலி வானத்தை எட்டியது.

"இது என்ன இலஞ்சம் வாங்கிய கையா? தேர்தல் காலத்திலே காங்கிரஸில் புகுந்து பதவி வேட்டை ஆடிய கையா? வெள்ளையனிடம் ஒரு காசு வாங்கிய கையா? வெள்ளையனை வரவேற்ற கையா? பள்ளிப் பருவம் முடியப் பேனா பிடித்த கை இது! இது நாள்வரை எனக்குப் பிடித்த கொள்கையை எடுத்துச் செல்லும் கை இது! இக்கைக்கு அண்ணல் காந்தியடிகளின் சிலையைத் திறக்கும் தகுதியில்லையா?" என்று அண்ணா கேட்டதும், மக்களின் கையொலி "கணீர்" எனஒலித்து-'தகுதியுடையவர்தான் தாங்கள்' என்று பதில் சொல்லிற்று.

"காந்தி இறந்தார்-கோட்சே என்னும் மராட்டியப் பார்ப்பானால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி கேட்டதும் திகைத்துப் போனேன். திருச்சி வானொலி நிலையம் என்னைப் பேச அழைத்தது. திருச்சிக்கு ஓடோடிச் சென்றேன். காந்தியாரைப் பற்றிப் பேசினேன். நான் கயவனாயிருந்தால் போயிருக்கமாட்டேன். கட்சி வெறியனாயிருந்தால், அங்கு சென்றதும் காந்தியைக் கொன்ற பார்ப்பானைப்பற்றிப் பேசி, தமிழகத்தில் இரத்த ஆற்றை ஓடவிட்டு கை கொட்டிச் சிரித்திருப்பேன். அன்று காங்கிரஸ் நண்பர்கள் கேட்கவில்லை, 'அண்ணாதுரை! எங்கள் காந்தியைப் பற்றி பேச உனக்கு என்ன உரிமை இருக்கிறது?' என்று" என்று அண்ணா அவர்கள் கேட்டார்கள். எதிரிகள் எனப்படுவோர் நண்பர்களாயினர். பெருந்தன்மை ஒளி கொட்டியது.

"காந்தியடிகளிடம் எதிரியையும் மதிக்கும் பண்பு இருந்தது. அந்த ஒளி எங்கே! இந்த இருள் எங்கே? பெருந்தன்மை அங்கே! குறுகிய மனப்பான்மை இங்கே!"

அண்ணாவின் சொற்கள் வெடித்துக் கிளம்பின. வேலூரின் வரலாற்றில் அண்ணாவின் வருகை பொன்னாள்.

அந்த மேதையின் அரை நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ளும் பேறு பெற்றமைக்கு பெருமைப்படுகிறேன். இந்தத் தலை முறையின் தனிப் பெரும் ஆற்றல் அண்ணா!

இந்தத் தென்னகத்தின் தலை சிறந்த பேச்சாளர்—கேட்டாரைக் கவரும் வகையில் பேசும் திறன் படைத்த சொல்வல்லார், அண்ணா! அண்ணா! அவர் நம் அண்ணா!

—வேலை. எஸ். எழில்.

வாழ்த்து!

சிற்றுளி - பத்மனுபன்
சிறப்புற வடித்தெடுக்கும்
அற்புத மலரை நாட்டின்
அருந்தமிழ்க் குலத்தோரெல்லாம்
பொற்பெரும் பொருளாய் எண்ணி(ப்)
போற்றுவர்! யானும் அந்தச்
சிற்பிகள் முயற்சிவாழச்
சிந்தையில் வாழ்த்துகின்றேன்.

சேலம் பொருட்காட்சி மலர்க் குழுவினர்க்கு ஆசிரியர் **கண்ணதாசன்** அனுப்பிய வாழ்த்து.

கண்ணதாசன்

மதுரை பாத்திமா மகளிர் கல்லூரியில் 'இலக்கிய மகளிர்' தியாகராசர் கல்லூரியில் 'மறுமலர்ச்சி'

7-8-'59 திங்கட்கிழமை காலை 7-15-க்கு, சென்னை விமான நிலையத்திலிருந்து மதுரை வழிச்செல்லும் திருவனந்தபுரம் விமானம் புறப்பட்டது. மதுரைக் கல்லூரிகளில் கலந்துகொள்வதற்கென நான் அதில் புறப்பட்டேன். சென்னைக்கு வந்திருந்த மதுரை-தியாகராசர் கல்லூரித் தொடர்பாளர் (Correspondent) கருமுத்து தி. சுந்தரம் அவர்களும், அதே விமானத்தில் வந்தார்கள். பிரஜா-சோஷலிஸ்ட் கட்சித் தோழர் அசோக்மேதா அவர்களும் அந்த விமானத்தில் வந்தார்கள். தலைவலி, முதுகுவலி, காது குடைச்சல், வாந்தி, மயக்கம்-இவ்வளவையும் உற்பத்தி செய்யும் விமானத்திற்கு 'டக்கோட்டா' என்று பெயர். தரை வழியே பயணம் செய்து அலுத்துப் போய், வானவழியில் செல்லலாம் என்று அதில் எறினேன். ஏறும் போதே 'விபத்து இன்ஷ்யூரன்ஸில்' பத்துருபாய் கட்டி, இலட்சருபாய்க்கு 'இன்ஷ்யூர்' செய்தேன். அது இந்திய விமானமல்லவா; 'இன்ஷ்யூர்' செய்யாமல் எப்படி ஏறுவது!

காலை 9-45 க்கு மதுரை விமானத் திடலை அடைந்தது 'டக்கோட்டா.' அப்பாடா! அப்பாடா! இப்போது உயிர் பிழைத்தது என்ற மகிழ்வோடு இறங்கினேன். நண்பர் இராம. இராமநாதன் எம். ஏ., அவர்களும், மற்றும் இரண்டு நண்பர்களும் நிலையத்துக்கு வந்திருந்து அழைத்துச் சென்றார்கள். தோழர் தி. சுந்தரம் அவர்கள் அன்புள்ளங்கொண்டவர். குழந்தைபோல் பழகக்கூடியவர். பண்பின் வடிவம். பணம் படைத்த குடியில் பிறந்தவர்கள் யாரும் அவ்வளவு பெருந்தன்மையும், திறந்த மனதும் உடையவர்களாக இருப்பதில்லை. தியாகராசர் கல்லூரி நுண்கலைக் கழகத் தொடக்க விழாவிற்காகத்தான் நான் சென்றேன். அவ்விழாவை முன்னிட்டே அவரும் வந்தார்.

பகல் 2-30 க்கு மதுரை பாத்திமா மகளிர் கல்லூரியில் நான் பேசுவதாக ஏற்பாடு. காலை 10 மணிக்கு விடுதியில் வந்து அமர்ந்ததும் பல மன்றங்களைச் சார்ந்த நண்பர்கள் வந்து சேர்ந்தார்கள். மதுரை ஒரு உணர்ச்சிக் களம்! கொள்கை வெறிகொண்ட நகரம். அறிவுப்பசி அங்கே ஏராளம். அங்கே பேசச் செல்வோர் சொல்லி வருவதைவிட, கற்றுவருவது அதிகம்! பெரும்பாலும் நூற்றுக்குத் தொண்ணூறு மாணவர்கள் அங்கே கழகப் பற்றுக்கொண்டவர்கள். ஒரு காலத்தில் மாநாட்டுப் பந்தலை எரித்து கழகத்தோழர்களைப் படாதபாடு படுத்திய மதுரை, வேங்கை நிகர்த்த வீரன் மதுரை முத்துவினால் கழகக் கோட்டையாக வளர்ந்தது. ஆண்ட இனத்தின் தலைநகரம், மீண்டும் ஆள வருவோரின் தனி நகரமாக இன்று காட்சியளிக்கிறது. விடுதிக்கு வந்த நண்பர்கள் வினாக்களை எழுப்பத் தலைப்பட்டனர். கழகத் தோழர்கள் ஒருவரையொருவர் சந்திக்கும்போது வினாவும் விடையும்பிறப்பதுஇயற்கை. உரையாடலே தனிச் சுவையோடு இயங்கும். அங்கே பொழுது நல்ல பொழுதாக நடந்தது. பகல் 1-45க்கு தமிழே வடிவான தனிப்பெரும் பேராசிரியர் சி. இலக்குவனார் அவர்களும், சிரித்துச் சிரித்து அழகுபெற்ற மெ. சுந்தரம் எம். ஏ., எம். லிட்., அவர்களும் விடுதிக்கு வந்தார்கள். தமிழ்ப் புலவர்களோடு உரையாடுவது தென்றல் எனக்குத் தாளாத மகிழ்வு. அறிவுப் பசி, அவர்களிடமிருந்து பல வற்றைக் கற்றுக்கொள்ளத் தூண்டும். பேராசிரியர் இலக்குவனார் அவர்களும் 'தென்றல்' பற்றி எனக்குச் சில கருத்துக்களைச் சொன்னார்கள் அந்தக் கருத்துக்களைக் கடைப்பிடிக்க நானும் உறுதி கொண்டேன், சரியாக 2-மணிக்கு பாத்திமா மகளிர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியை நா. சக்திவேல் அம்மையார் எம். ஏ; அவர்களும், மற்றொரு பேராசிரியையும் விடுதிக்கு வந்தார்கள். 'மணி ஆகிவிட்டது; புறப்படுங்கள்!' என்று துடித்துக்கொண்டேயிருந்தார். தோழர் இராம. இராமநாதன். குளிக்காமலே புறப்படச் சொல்லும் அளவுக்கு அவருடைய துடிப்பு இருந்தது. ஒரு வழியாகக் குளித்துவிட்டே புறப்பட்டேன்.

பாத்திமா மகளிர் கல்லூரியின் புதிய கட்டிடம் மதுரையிலிருந்து எட்டாவது கல்லில் இருக்கிறது. சகோதரி ரோஸ் என்ற கிருத்துவ அம்மையார் பெரும் பொறுப்போடு அந்தக் கல்லூரியை நடத்தி வருகிறார். தமிழக மக்களின் கல்விக்குக் கிருத்தவர்கள் செய்துள்ள தொண்டினை யாரும் மறந்துவிடமுடியாது. அந்தச் சகோதரியார் தன் பொருளையும், பிறர் துணையையும் கொண்டு ஒழுக்கப் பண்பையும், உயரிய கல்வியையும் பாத்திமாக் கல்லூரி மூலம் வளர்த்து வருகிறார்.

கல்லூரித் தலைவியர் தோழியர் சகுந்தலா அம்மையாரும், தமிழ் மன்றச் செயலாளரான சிவகெங்கைத் தோழியரும், தமிழ்ப் பேராசிரியை சாரதா அவர்களும் மற்றும் மாணவியரும் கல்லூரி வாயிலில் வரவேற்றனர். விளாங்குடி என்ற பெயர் படைத்த அமைதியான அந்த இடத்தில், கல்லூரியின் எடுப்பான கட்டிடங்கள் தலை நிமிர்ந்து நின்றன. அதைப்போலவே கல்லூரி மாணவியர், ஆசிரியப் பெருமக்கள் அனைவரும் பண்பும், பெருமையும் உடையவர்களாகக் காணப்பட்டார்கள்.

விழாவின் தொடக்கத்தில் பேராசிரியை நா. சக்திவேல் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்கள். அழகிய தமிழை, பொருட் சுவையோடு கையாண்டார்கள். 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்ற குறளே இறை வணக்கப் பாடலாகப் பயன்பட்டது.

இலக்கிய மகளிர்பற்றியும், இன்றைய மகளிர்பற்றியும் முப்பது நிமிடங்கள் பேசினேன். தமிழ்ச் சுவை மிக்க மாணவியராதலின் பேசுவதற்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. இந்தக் கல்லூரி தமிழுலகிற்குப் பல துறைகளிலும் பெருமை அளிக்கத்தக்கதாகும். மாணவியரும், ஆசிரியர்களும் ஒரு குடும்பமாக இருந்து வருகிறார்கள். அங்கிருந்து விடை பெற்றுப் புறப்பட முயன்றும், விருந்துவிடவில்லை. தோழர் இராம. இராமநாதனுக்குக் கோபமே வந்துவிட்டது. 'மணி ஆகிவிட்டது! மணி ஆகிவிட்டது!' என்று துடித்தார். தோழர் எம். சுந்தரம் எப்பொழுதும்போல் 'பொறுங்கள்!' என்றார். பிறகு புறப்பட்டு, 4 மணிக்கெல்லாம் தியாகராயர் கல்லூரி வந்து சேர்ந்தோம்.

கருமுத்து தியாகராசரின் இரண்டாவது திருமகனார், தி. மாணிக்கவாசகம் அவர்கள். 'தமிழ்நாடு' நாளிதழின் பொறுப்பாளரும் அவரே. சமயப்பற்று உடையவர். எனினும் தமிழ்வெறி கொண்டவர். 'நாரணன் விளையாட்டு' என்ற பெயரில் இராம காதை ஆராய்ச்சியும், 'மன்னர் மன்னன்' என்ற பெயரில் இராவணனைப்பற்றிய நாடகமும். மற்றும் பல நூல்களும் அவர் எழுதியுள்ளார். அவர் பாதை நமக்குப் பிடிக்காததாயினும், பண்பு நமக்குப் பிடித்ததே! ஒவ்வொரு வினாடியையும் தமிழாய்விலேயே கழிக்க வேண்டும் என்ற அவரது பேராவல், தமிழ்ப்பெருமக்களின் வணக்கத்திற்குரியது. தன்னுடைய வழியில் தளரா உறுதிபெற்றவர் அவர். அண்ணனுக்கும் தம்பிக்கும் கருத்திலே வேறுபாடு இருந்தாலும், குணத்திலே முரண்பாடு இல்லை. திரு. மாணிக்கவாசகம் அவர்கள் முன்கூட்டியே கல்லூரிக்கு வந்திருந்தார்கள். கல்லூரித் தலைவர் வரதாச்சாரியார் அவர்களும், திருக்குறட் கழகத் தலைவர் கி. பழனியப்பன் அவர்களும், மதுரை எழுத்தாளர் மன்றத் தோழர்களும் வந்திருந்தனர்.

சரியாக 4-30 க்கு நுண்கலைக் கழக விழா தொடங்கிற்று. திரு. தி. சுந்திரம் அவர்கள் தலைமை வகித்தார்கள். தோழர் இராம. இராமநாதன் அவர்கள் கவிபாடி வரவேற்றார்கள். தலைவரவர்கள் தமது முன்னுரையில் கூடியிருந்த மாபெருங் கூட்டத்தைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள்: "வேறு யாரும் பேசும்போது இந்தக் கூட்டத்தில் கால்பங்கும் வருவதில்லை. இன்று அவை நிறைந்திருக்கிறது. இனிக் கூட்டங்கள் கூட்டும்போது 'கண்ணதாசன் பேசுவார்' என்று விளம்பரம் செய்து, மற்றவர்களைப் பேசவைக்க வேண்டும்"-இப்படி அவர்கள் குறிப்பிட்டதில் எனக்கு உடன்பாடில்லை. 'கண்ணதாசன்' என்பதற்குப் பதில் 'கழகப் பேச்சாளர்கள்' என்று குறிப்பிட்டிருந்தால் பொருத்தமாக இருந்திருக்கும்! வந்த மாணவர்கள் என்னை விரும்பியவர்கள் என்பதைவிட, கழகத்தை விரும்பியவர்கள் என்பதே பொருந்தும். எனினும், அன்பு மிகுதியால் அவர்கள் அவ்வாறு குறித்தார்கள்.

'மறுமலர்ச்சி' என்ற தலைப்பில் பேச யான் எழுந்தேன். அந்த தலைப்பினை யான் கொடுத்தற்குக் காரணம் உண்டு. மதுரை அமெரிக்கன் கல்லூரியில் சின்னாட்களுக்குமுன் பேசிய தோழர் ஜீவானந்தம், அண்ணாவும், பாரதிதாசனும் புதுமைஇலக்கியவாதிகள் அல்லவென்றும், பாரதியோடு அவர்களை ஒப்பிடுவதே மடமை என்றும்பேசினாராம். (இதுகுறித்தஒரு கட்டுரை இந்த இதழில் வெளியாகி இருக்கிறது.) அந்த வேடிக்கை மனிதரின் பொருமைக் கருத்துக்களை மறுப்பதற்கென்றே, 'மறுமலர்ச்சி' என்ற தலைப்பை யான் எடுத்துக் கொண்டேன். பாரதி தெளிவற்ற கவிஞன்; பாரதிதாசன் தெளிவுமிக்க பாவலன் என்பதைச் சான்றுகளோடு கூறினேன். அண்ணா அவர்கள் இலக்கியத்தில் மட்டுமல்ல, மொழியிலேயே புதுமை கண்டவர்; 'ஜீவானந்தங்'களுக்கும், 'சிவஞான'ங்களுக்கும் புதுமைத் தமிழ் போதித்தவரே அவர் தான். கலை, இலக்கியம், அரசியல், மொழி இவை நான்கிலும் தனிவழி கண்டு, ஒருமுறைக்குத் தலையாயவர் அவரே. அவர் இல்லையேல் கலையிலே புரட்சி இல்லை; தமிழிலே புதுமை இல்லை; இலக்கியத்தில் மறுமலர்ச்சி இல்லை; அரசியலிலே விழிப்புணர்ச்சி இல்லை என்பதை உணர்த்தினேன். தமிழ்த்தந்தை மறைமலையடிகளாரையும், திரு. வி. க. அவர்களையும், நாவலர் நெடுஞ்செழியனாரையும் நான் மறந்துவிடவில்லை.

மாணவர்கள் உணர்ச்சி வசப்பட்டிருந்தனர். புரட்சிகரமான கருத்துக்களையே அவர்கள் கைதட்டி வரவேற்றனர். அமெரிக்கன் கல்லூரி, மதுரைக் கல்லூரி மாணவர்களும், பாத்திமா கல்லூரி மாணவியரும் அங்கே குழுமியிருந்தனர். அனைவரும் ஒரே வழியில்தான் நின்றனர். 'அண்ணா' என்ற பெயர் கேட்டால், மண்டபம் அதிர்ந்தது. கூட்டம் அனைத்துமே நம் குடும்பமாக இருந்ததால், என்வழக்கத்திற்குவிரோதமாக எடுத்துக்கொண்ட பொருளிலிருந்து சற்று விலகியும் போனேன். 'நான்' எனும் அகந்தையும் ஓரளவு எழுந்தது. பிறகு எனக்குள்ளாகவே அது அடங்கிவிட்டது.

தமிழ்ப் பெரும் புலவர் ஔவை சு. துரைசாமி அவர்கள் தனக்கே உரிய அடக்கத்தோடு அவையிலிருந்ததைப் பார்த்ததால், ஒருவகை அவையடக்கமும் எனக்கு உண்டாயிற்று. 6-மணிக்கு விழா முடிந்தது. விடை பெற்றுப் புறப்பட்டேன். மதுரைச் சிங்கம் தோழர் முத்து அவர்கள் இறுதிவரை உடனிருந்தார்கள். எப்பொழுதும், எந்தக் கழகப் பேச்சாளர் வந்தாலும் உடனிருந்து அழைத்துச் சென்று செம்மையுறக் கூட்டங்களை முடிக்கும் பண்பு அவருக்கே உரியது. புகைவண்டி நிலையம்வரை வந்து தோழர் முத்து அவர்களும், கல்லூரி நண்பர்களும் வழியனுப்பினார்கள். புகை வண்டியில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதனால் அப்பொழுது 'இன்ஷ்யூர்' செய்யவில்லை-அதற்கு 'இன்ஷ்யூரன்'சும் கிடையாது.

காலை 7-மணிக்கு சென்னை வந்து சேர்ந்தேன். மறக்க முடியாதது, மதுரை நிகழ்ச்சி! ★

"குற்றம் குற்றமே!"

—நாடகம்.

ஓர் அறிவிப்பு.

நடிகர் பலர் படத்துறை நடிகர்களாயிருப்பதால், ஒத்திகை குறிப்பிட்டபடி நடத்த முடியவில்லை. நாட்கள் குறைவாகவே இருப்பதால், பூவிருந்தவல்லி மாநாட்டில் 12-9-'59 அன்று நடத்துவதாக இருந்த நாடகம் கைவிடப்பட்டது. மாநாட்டுச் செயலாளர்க்கும் அறிஞர் அண்ணா அவர்கட்கும் அறிவிக்கப்பட்டு விட்டது.

ஒத்திகைகள் நன்கு முடிந்த பின், சென்னையிலும் பிறநகரங்களிலும் இந்நாடகம் நடைபெறும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,
கண்ணதாசன்.

அடுக்குமொழி மன்னர்!

எதுகை மோனையோடு எழுதுவதையும் பேசுவதையும் இன்று அடுக்குமொழி என்று மக்கள் கருதுகின்றனர். எதுகையும் மோனையும் இலக்கியத்திற்கு இயல்பானவை. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த இலக்கியமாயினும், இடைக்கால இலக்கியமாயினும், இன்றைய இலக்கியமாயினும் இந்த நயம் பரந்து பயிலப்பட்டுள்ளது; சிறந்தது விளங்குகின்றது.

அடுக்குமொழி அடுக்குமோ என்ற வினாத் தொடுக்கும் 'விந்தை மனிதர்' இற்றை நாளில் பலராவர். அடுக்குச்சொல் அமைத்து எழுதும் ஆற்றல் இல்லாதவர் அவருள் ஒரு வகையினர். இவர்தம் கூற்று, மணமாகி மக்கட் பேறு பெற்று மகிழ்ச்சியோடு வாழும் மங்கை நல்லாளை, மலடி பார்த்துப் பரிகாசம் பண்ணுவதை யொக்கும், இன்னொரு பிரிவினர் "எதுகையும் மோனையும் கவிதைக்கே உரியன வல்லவோ; கட்டுரையாளர் அவற்றைக் கைக்கொள்ளலாமோ?" எனக் கடிந்துகொள்வர். இப்பிரிவினரின் பேச்சு, மலரின் மணத்தை மாளிகை வாசிகள் மட்டுமே முகர்ந்து மகிழ்ந்திடலாம்; மற்றையோர் அதைத் துய்த்து இன்பம் எய்திடலாகாது என்பதை யொத்தது. மற்றொரு கூட்டம் "அடுக்குமொழியாலேயே ஓர் அரசியல் கட்சி வளர்ந்து வருகிறது; மக்களிடையே செல்வாக்குப் பெறுகிறது" என்று தவருக எண்ணித் தவித்து நிற்கிறது. இது உண்மையாயின்; எல்லாக் கட்சிகளுக்கும் அந்த மொழி சொந்தம். எந்தக் கட்சியும் அதைப் பயன்படுத்தி ஏற்றம் பெறலாம். உயர்ந்த வகை உரம் போடுவதால் செந்நெல் மட்டும் செழித்து வளரும் என்பதன்று; கன்னலும் கொழித்து நிமிரும்.

சங்ககால நூற்களிலும், திருக்குறளிலும் அடுக்குமொழி அழகுறத் திகழ்கிறது; நூல் நுவல்வோர் நெஞ்சம் மகிழ்கிறது. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் எதுகைமோனைச் சிறப்பைக் காணலாம்; களிக்கலாம். சிந்தைக்கும் செவிக்கும் இனிய சிந்தாமணியிலும், "கற்பவர் உள்ள"த்தைக் கொள்ளைகொள்ளும் கம்பனின் காவியத்திலும் அடுக்குமொழி மிடுக்கோடு விளங்கும். மணிவாசகரும் மற்ற நாயன்மாரும், பெரியாழ்வாரும் பிற ஆழ்வாரும் அடுக்குமொழியை மறந்தாரல்லர். தாயுமானவரும், தனிப்பாடல் செய்தோரும் அதைத் துறந்தாரல்லர். இராமலிங்கரும் இற்றைநாள் பாரதி [illegible] எதுகையையே எடுத்தாண்டனர்.

[illegible] டியல்தானே காட்டப்படுகிறது; உரைநடைக்குச் சான் [illegible] எண்ணுவர் சிலர். பண்டை நாள் உரை நூற்களில் [illegible] சில கவனிப்பாரற்று ஒழிந்து போயின. [illegible] இல்லை எனல் இயலாது [illegible]

[illegible] சிறந்த [illegible]
[illegible] தலைசிறந் [illegible] விளங்கும்
[illegible] சதுப்பிள்ளை அவர்களின் அழகு தமிழ்ப்
[illegible] ழிப் பேச்சல்லவோ? எழுதும் கட்டுரை
[illegible] நிறைந்த எழுத்துக்களல்லவோ? படித்த
[illegible] எதுகை மோனையில் ஈடுபாடு உண்டு.
[illegible] பேராசிரியரின் நூல் ஒன்றில் இந்த உண்
[illegible] பு நம் கவனத்தைக் கவர்கின்றது.

[illegible] ம் பாட்டுக்குத்தான் அழகு என்பதில்லை;
[illegible] என்று பொதுமக்கள் கருதுகின்றார்கள்.
[illegible] மோனை என்பதை 'எகனைமொகனை' என்று
[illegible] என்ற சொல்லோடு இசையும் வண்ணம்
[illegible] இலக்கியப் பதத்தை 'எகனை' என்று ஆக்கி

[illegible] பண்டு தொட்டு இன்றளவும் தமிழ் மொழியோடு இயைந்து [illegible] எதுகையும் மோனையும் அறிஞர் அண்ணாவைத் தஞ்சம் புகுந் [illegible] நெஞ்சம் மகிழ்ந்தன. மாற்றாரும் வேட்ப மொழியும் சொற்பொழிவு [illegible] கற்பனைச் சிறப்போடு கவினுற விளங்கும் கட்டுரை, கதை நாடகம் [illegible] திலும் அண்ணாவின் அழகுநடை சிறப்புச் செய்கின்றது. அண்ணா [illegible] றியதுமே வெள்ளம்போல் கூடியிருக்கும் மக்கட் கூட்டத்தின் உள்ளம் மகிழ்ச்சிப் பெருக்கால் துள்ளும்; அமைதி நிலவும்.

ஆங்கிலத்தில் பேசுவதே சிறப்பு என்று எண்ணிய அந்தக் காலத்திலும் அண்ணாவின் அடுக்குமொழிப் பேச்சு மக்கள் மனத்தை ஈர்த்தது. தமிழுணர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டுள்ள இந்தக் காலத்திலும் இலட்சக் கணக்கான மக்கள் கூடுகின்றனர்; அவர் பேச்சைக் கேட்டுக் களிப்புக் கூத்தாடுகின்றனர்.

அண்ணா பேசிய பேச்சுக்கள் ஆயிரமாயிரம்; எழுதிய கட்டுரைகளும் இன்ன பிறவும் எண்ணற்றன. அவை அத்துணையிலுமிருந்து சான்று காணப் புகுவோமாயின் இக்கட்டுரை சாலவும் விரியும். சில எடுத்துக் காட்டுக்கள் போதும். "ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதுதானே முதுமொழி.

அண்ணா பெய்யும் சொற்களுக்கு வலிவும் பொலிவும் அதிகம். சான்றுகள் அவற்றை ஓரளவு விளக்கும்; அவர் புகழ் முழக்கும்; அண்ணாவைத் தாக்க வேண்டுமென்ற சின்ன எண்ணத்தால் அடுக்குமொழியையே அருவறுப்பவர் தமிழின் இயல்பை அறியாதார்; அதன் இனிமை தெரியாதார். அடுக்குமொழி பொருளற்ற வெற்றுரையாகுமே எனப் புலம்புவோர் சிலர். "**தேள் கடி தித்திக்கும்**" என்றால் மோனை நயம் உள்ளதே என்று மக்கள் மன்றம் ஒப்புக்கொள்ளாது. "**தங்கமும் சிங்கமும் பங்காளிகள்**" என்றால் எதுகை யழகு இருக்கிறதே என்று எவரும் ஏற்றுக்கொள்ளார்.

"அடுக்குமொழி அண்ணா" எனக் கூறினால் போதாதோ, அடுக்குமொழி மன்னர் என்று கூற வேண்டுமோ எனின். விடை இதுவே. அண்ணா தாம் மட்டும் அடுக்குமொழி பேசி எழுதிப் பெருமை பெற்றார் என்றால் "அடுக்குமொழி அண்ணா" என்று சொன்னாலே போதும். ஆனால் அண்ணா "அடுக்குமொழி உலகம்" ஒன்றையே செந்தமிழ் நாட்டில் உருவாக்கியிருக்கிறார். அந்த உலகிற்கு அவர் தாம் மன்னர். ஆம், "**அண்ணா அடுக்குமொழி மன்னர்.**"

—அமுது எம். ஏ.

தாயகத் [illegible]

தொண்ட [illegible]

நமது திராவிடத் தாயகத்தின் தனிப் பெரும் தொண்டர், எஃகு உள்ளம் படைத்த இளைஞர், அறிஞர், சிறந்த பேனா வீரர், செஞ்சொல் மன்னர் அண்ணாவைப் பற்றிக் கூறுவது பட்டப்பகலில் பகலவனைச் சுட்டிக்காட்டுதலை ஒப்பதேயாகும். அறிஞர் அண்ணாவை "**நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாது ஒருபோதும் இருந்தறியேன்**" என்னும் நிலையில் மனத்தில் வைத்துப் போற்றி வருகின்றனர் பல்லாயிரவர். அப்படிப்பட்ட நல்லறிஞர், பல்லவரால் போற்றி ஆளப்பட்ட காஞ்சிமா நகரில் பிறந்து இன்று உலகத்திற்கே ஒளிவிளக்காய் விளங்குகின்றார். உயர்நிலைப்பள்ளிப் படிப்பைக் காஞ்சியில் முடித்து, கல்லூரிப் படிப்பை பச்சையப்பன் கல்லூரியில் துவக்கினார்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி [illegible] நுண் அறிவை பல [illegible] னர். [illegible] ரனார், ([illegible] மாணவர் இல்லக் [illegible] ப் பலநாள் இருந்தவர்) பேராசிரியர் சி. டி. இராசேசுவரனார், B. Sc. (Lond.) ஆகியவர்களும், கல்லூரித் தலைவர் சின்னத்தம்பி (பிள்ளை) முதலியவர்களும் நன்கு பாராட்டினர். நமது அண்ணா, பேராசிரியர் வரதராசனார், சி. டி. இராசேசுவரனார் ஆகியவர்களிடம் மிக்க மரியாதையும் அன்பும் உடையவர்.

அறிஞர் அண்ணா கல்லூரியில் படிக்கும்போதே 1932-ல் ஆங்கில மாணவர் கழகச் செயலாளராய்த் திகழ்ந்தார். கல்லூரியில் "தீண்டாமை கூடாது", "சாதிமுறை ஒழியவேண்டும்", "கலப்புமணம் ஒன்றினாலேயே சாதி ஒழியமுடியும்" என்ற தலைப்புக்களில் பேசியுள்ளார். இவர் கல்லூரி இதழ்களில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். அதில் ஒன்று "Moscow May Parade" என்பது. பள்ளிப்படிப்பு முடிந்தும் இவர் படிப்பதை நிறுத்தவில்லை. இவர் பெரிய எழுத்து விக்கிரமாதித்தன் கதை, புலந்திரன் களவு, அல்லியரசாணிமாலை முதல் திருக்குறள், சிலப்பதிகாரம், கம்பராமாயணம், பெரியபுராணம் ஈருகவும், பெர்னாட்ஷா, சர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ், பேராசிரியர் லாஸ்கி முதலியவர்கள் நூல்களையும் படிப்பார். சங்கப்பாடல்களையும் ஊன்றிக் கற்றார்.

இவர்தம் பேச்சைக் கேட்ட பேராசிரியர்கள், இவர்தம் அறிவின் திறத்தைப் பலபடப் பாராட்டினர். இக்கட்டுரை எழுதும் அடியேன் ஒரு சிறுவனாய்ப்பள்ளியில்படிக்கும் மாணவனாய் இருந்து 1935-ம் ஆண்டில் நகராண்மைக் கழகத் தேர்தல் வர, அதில் சேர்ந்து இரவு பகலாகப் பாடுபட்டேன். அந்த நகராண்மைக் கழகத் தேர்தலில் திரு. டாக்டர் எம். வி. சிவஞானம், ஆசிரியர் எஸ். எஸ். அருணகிரிநாதர், எம். வி. சம்பத், கோவிந்தராசன், பீ. சம்பந்தம், எம். ஏ., சின்னக்கண்ணு எனும் சிவஞானம், டா [illegible] சி பஞ்சாட்சரம், திருநாவுக்கரசர், [illegible] ராச (முதலியார் [illegible] முதலியவர்க [illegible] காண அ [illegible] கூறின் [illegible] யெல்லாம் [illegible] கள் கணி [illegible] காட்டி [illegible] காட்சி என [illegible] நிற்க, அ [illegible] நண்பர், [illegible] என்பவர் [illegible] படிந்து [illegible] ஓடி ஓடி [illegible] ஓட்டம் இ [illegible] எங்கே பே [illegible] இடத்தை [illegible] இன்றும் [illegible] அண்ணா [illegible] போதெல் [illegible] கவிகள் [illegible] கரிகால் [illegible] கூறுவ [illegible]

"நாடன் என்கோ [illegible]
ஊரன் என்கோ [illegible]
பாடிமிழ் பனிக் [illegible]
சேர்ப்பன் எ [illegible]
யாங்ஙனம் [illegible]
ஓங்குவாட் [illegible]

எனப் பொய்கையார் [illegible] புலவர் சேரமான் கோ [illegible] மார்பனை என்னென்று [illegible] அறியாமையால் மயங்கிய [illegible] மயங்குவதும் உண்டு.

மேலும் "**நூலறி பு [illegible] லிசைப் புலவன், [illegible] நன்மொழிப் புலவர் [illegible] லானை நல்லாசிரியன் [illegible] புரையுநர் இல்லா [illegible] யோய், ஓங்கிய [illegible] உயர்ந்த கேள்வி [illegible] மருதன், நூல்வழிப் [illegible] நுணங்கு நுண் தே [illegible] மான் நுழைபுலன் [illegible]**" செய்யுட் குறிப்புக்க [illegible] நினைந்து நினைந்து [illegible] உண்டு.

இப்படி பாவர்க் [illegible] அளித்து அம்மயக்கத் [illegible] யும் தன் பக்கம் தா [illegible] கொள்கை பக்கம் - அ [illegible] வளரும் திராவிட [illegible] கழகப் பக்கம், ஈர்க்கு [illegible] பருந்து அவரது சொல் [illegible] சொல்வன்மைக்கு பொய்யில் வள்ளுவர் கூறும் இலக்கண நினைவிற்குக் கொண்டு சாலச் சிறப்புடையதாகும்.

"**ஆக்கமும் அறிவும் [illegible] லால் வரும்; கேட்ப [illegible] அனைவரையும் கட்டுப் [illegible] கேட்காதவர்களும் [illegible] நிலையில் மொழிவது சொ [illegible] சொல்லுகின்ற தனது [illegible] யும், கேட்கின்ற பிறர் [illegible] யும் அறிந்து சொல்ல வே [illegible]**

— அடுத்த பக்கம்-

மாணிக்கம் - இந்திரா.

இவர்கள் திருமணம், பட்டுக்கோட்டையில் திரு. ப. வாணன் அவர்களின் சகோதரர். டி. லிங்கம் அவர்களின் மகள். வாழ்க!

அக்டோபர் முதல் வெளிவருகிறது!

"தமிழரசி"

[புதுமைத் தமிழ் மாத ஏடு]

ஆசிரியர்: மா. வீ. இளந்தமிழன்

புதுமைப் பூங்காவிலே பூத்த எழில்மலர்! சிறப்பான சிறுகதைகள்-உயர்ந்த கட்டுரைகள், கவிதைகளுடன், கேள்வி - பதில், வேடிக்கைத் துணுக்குகள், புதுமையான "அரசியல் - சினிமா" ஆகியவைகளுடன் புதுமையான முறையில் வெளிவருகிறது.

தனி இதழ் 25 காசு. ஆண்டுச் சந்தா ரூ. 3.

முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் விண்ணப்பிக்க.

விபரங்கட்கு:—

"தமிழரசி", 229, இடையர் வீதி, கோயமுத்தூர்-1.

...ச்சி—

...ந்த அற
இல்லை.
...வெல்லக்
...ல் இல்
...ண்ணிச்
பிறர்
...ல் தாம்
...பயனைத்

...வலை ...கைவர்
...பாது. ஒழுங்கு
...மயாகப் பேசும்
...லகமே ஏவல்
...தாம் படித்தவை
...ளங் கொள்ளப்
ஆ... லில்லாதவர்கள்
மணமில்லாத மலரை

...கங்கள்தான் வள்ளுவர்
...மைக்கு வகுத்த சட்டம்-
... இதை மனத்தகத்தே
...ணுவின் சொல்வண்மை
...னைந்து இன்புறற் பால

...ங்கால் சோர்வின்றிச்
...லுதல் மாண்பினிதே"
—இனியவை நாற்..

...ததனை
...றமொழி"
- கொன்றைவேந்.

...ரையார் ...மேல்
...ார்பொய் ...
...யார்
...துரையார்..." - ஆசாரக்.

...ய வாயினும்
... இடமறிந்து
...ணர் வல்லெனின்
...லாகும்..." -நீதிநெறி.

...
...கற்ற கண்ணும்
...ணுக்கமொன் றில்லாதார்
...திற்கும் பெற்றி அரிது."
-நாலடி.

...த்திலாகிறது
...யத்திலாகாது." -பழ.
...கபடச் சொல்லேல்."
-ஆத்திச்.

...தனை பாடல்களையும் அண்ணு
...சொல் வன்மையையும், நினைந்து
...கள்.

—சிறுவை. ந. இனியன்.

(...டுத்த இதழில் முடியும்.)

அறிஞர்!

தலைமுறைக்கொரு தலைவன்; தாயகத்திற்கோர் அறிஞன்; காலத்திற்கொரு கலைஞன்; இலக்கியத்திற்கொரு புலவன்-இத்துணைப் பெருமைகளுக்கும் உரிய திராவிடத் தளபதி வாழும் நாளில் வாழும் வாய்ப்புப் பெற்றமைக்கு பெருமைப்படுகிறேன். ஆண்டைம்பதை அத்தலைவன் கடக்கும் இத்திருநாளில் கலந்திடும் பேறுபெற்றமைக்கு மகிழ்ச்சி கொள்கிறேன்.

அன்னவனை வாழ்த்துகிறேன். வாழ்க! வாழ்க!

சமுதாயத்தின் விடிவெள்ளி; சட்டமன்றின் தனி ஒளி; அரசியலின் கலங்கரை விளக்கம்; அறிவுலகின் பெருமன்னன்-இத்துணை வாழ்த்துக்களுக்கும் உரிய தலைவனின் கழகத்தில் பாடுபடும் பணிபெற்றமைக்கு உவகை கொள்கிறேன். அத்தலைவனின் சுட்டுவிரலசைவிலே, வெங்குருதி சிந்தவும் வேல் கொண்டெறியவும் பயிற்சி பெற்றமைக்குக் களிபேருவகை கொள்கிறேன்.

அன்னவனை வணங்குகிறேன். வளமுறுக; புகழுறுக!

அன்னவனின் பெருமைகள் ஆயிரமாயிரம். அவன் கைபட்டுச் சிறந்த எழுத்துக்கள் இலட்ச லட்சம். அவனின் நாவில் விளையாடிப் பெருமைபெற்ற சொற்கள் கோடி கோடி. அவன் என் தலைமுறையின் தனிப் பெரும் பொதுப் பணியாளன்.

அவனைப் படிக்கவும் கேட்கவுமான நிலைபெற்றேன்; நிறை மகிழ்வுற்றேன். அவன் கட்டளைகளை ஏற்கிறேன்; செய்கிறேன்!

ஏழையர் கண்ணீரைத் துடைக்கும் வாழ்வை வாழ்கிறான். அன்னவன் இலங்கை வாழ் தமிழருக்குச் சிந்திய கண்ணீருக் களவில்லை; மலாயா ஆட்சியினரைத் தட்டிக் கேட்கத் தவறவில்லை; பர்மாவில் பட்டுழல்வோருக்கு அவன் கொட்டிய குருதி கொஞ்சமல்ல.

உரிமைப் பயிரை, இரத்தம் கொட்டி வளர்க்கும் பெருமைக்குரிய தலைவன் அவன்.

என் நெஞ்சில் என் இனத்தார் மீது பாசத்தை வளர்த்த அவனுக்கு என் நன்றி!

பல்லுலகும் பலமொழியும் வியந்தோதும் பெருந்திறலும் அருஞ் சிறப்பும் கொண்டவனே! கன்னடமும் களி தெலுங்கும் கவின் மலையாளமும் கன்னித் தமிழும் பேசுவோர் வணங்கிக் கேட்கும் கருத்தெழிலும் பொருட்செறிவும் கொண்டவனே! நினது பொன்விழாவில் நாங்கள்-திராவிட மறவர்கள்-எடுத்துக்கொள்ளும் சூளுரை, இதோ:

"எக்கொடுமை ஏற்றேனும், கொத்தடிமை தீர்ப்போம்! இப்பெருமை எப்போதும் நிலை நிற்க, விடுதலையும் காண்போம்! இவ்விடுதலையை நின்விழி யெதிரே காண்போம்!"

— மா. பாண்டியன்.

அறிவிப்புகள்.

இவ்விதழின் 8, 9-ம் பக்கங்களில் உள்ள படங்களை உதவியவர், சென்னை-திரு. சிவசங்கரன் அவர்கள். 9-ம் பக்கத்தில் உள்ள வீடுகளின் படங்களை எடுத்தவர், "பிலிம நியூஸ்" தருமு அவர்கள்.

★

இடமின்மையால், இவ்விதழில், காரைக்குடிக் கவியரங்கமும், "ஐயம் அகற்று", "தொல்காப்பியச் சுவை" —தொடர் கட்டுரை முதலியவையும் நிறுத்தப்பட்டுள்ளன. அடுத்த இதழில் அவைஇடம் பெறும்.

★

இந்த இதழில் இடமின்மையால் நிறுத்தப்பெற்ற பல கட்டுரைகள், வரும் இதழில் இடம் பெறுகின்றன. எழுத்தாள அன்பர்களும் வாசகத் தோழர்களும் பொறுத்தருள்க.

அடுத்த இதழில், திரு. ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் எழுதும், "திராவிடம் தென் சொல்லே" எனும் கட்டுரையும் இடம் பெறும்.

★

"தென்றல்" நாளிதழ் பற்றிய விவரம் அடுத்த இதழில் வரும்.

அண்ணியார்.

டாக்டர் அ. சிதம்பரநாதனார் வாழ்த்து.

தமிழ் மக்களைப் பல்லாண்டுகளாகத் தட்டியெழுப்பி வருபவரும், கண்விழித்துப் பார்க்கும்படி தூண்டி வருபவரும், தமிழிலக்கியத்திற்குப் புதிய அணிகள் தந்து செழிக்கச் செய்து வருபவரும், தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்காக உள்ளத்தாலும் உரையாலும் செயலாலும் அயராது உழைத்து வருபவரும் ஆகிய பேரறிஞர் அண்ணாத்துரையவர்கள் இன்னும் பல்லாண்டுகள் உடலுரத்தொடு வாழ்ந்து மேன்மேலும் சிறந்த நற்றொண்டுகள் ஆற்றவேண்டும் என வாழ்த்துகிறேன்.

சென்னை,
12-9-'59.

அன்புள்ள,
அ. சிதம்பரநாதன்.

கட்டளை இட்டார்.

ஒளியிழந்து வாழ்க்கையிலே உணர்விழந்து பெற்றயிரு
விழியிழந்து கதியிழந்து வீரரெனும் சிறப்பிழந்து
நிலையிழந்து ஐயையோ நீதியையுந் தானிழந்து
கலையிழந்து பொலிவிழந்து காட்சியுறு மக்களைத் தன்
எழுச்சிக் கரங்கொடுத்தான் எழுப்பி நிறுத்திவிட்டான்!
ஏற்றம் பெறப்படைத்தான்; இவ்வுணர்ச்சி வரவழைத்தான்!
"விழிப்புற்(று) எழுமகனே! வீரர்வழி வந்தோனே"
மொழிப்பற்(று) எங்கே? உந்தன் முன்னோரின் சிறப்பெங்கே?
அவனியிலே உன்னு(டு) அடிமைத் தளையறுத்து
பவனிவர வேண்டாமோ பாரப்பா உன்நிலையை?"
என்றே எடுத்துரைத்தான் என்றென்றும் இவ்வுணர்ச்சி
நன்றே வளர்த்துவரும் நம்அண்ணா வாழியவே!

—பி. மணிவேந்தன் பி. ஏ.

அண்ணா 1938-ல். படம் உதவியவர்: புத்தனேரி மதிவாணன்.

தென்றல் விடு தூது!

வள்ளல் ஒருவன் என்றன்
உள்ளம் கவர்ந்த துண்டு.
மெள்ள அவன் பெயரை
விள்ளேன் என்குதென் உள்ளம்! — (வள்)

பள்ளப் புனல் விரும்பும்;
துள்ளல் மது விரும்பும்;
அள்ளல் அவா விரும்பும்,
எள்ளேன் என்குதென் உள்ளம்! — (வள்)

மெள்ள வரும் பருவம்
வெள்ளை உளந் துருவம்
பொள்ளல் இடை புகுத
வெள்ளம் என்குதென் உள்ளம்! — (வள்)

தெள்ளத் தெளிந்த வர்கள்
கொள்ளை கொடுத்த உயிர்
அள்ள வகைசெய் யாக்கால்,
தள்ளேன் என்குதென் உள்ளம்! — (வள்)

பிள்ளை படுந் துயரம்
தள்ளை அறியி னல்லால்,
பிள்ளைமைக் கேது பிழைப்பு
உள்ளதென் குதென் உள்ளம்! — (வள்)

எள்ள வில்லாத கலை
வள்ளல் அறியி னல்லால்,
அள்ளல் துயரில் உயிர்
தள்ளா தென்குதென் உள்ளம் (வள்)

அண்ணல் தனது தங்க
வண்ண விழாவில் தென்றல்,
பண்ணார் மலரெண் மன்றல்
எண்ணம் என்குதென் உள்ளம்! — (அண்)

மண்ணில் அறிஞர்க் கெல்லாம்
விண்ணில் ஒளிகள் காட்டும்
கண்ணார் அறிஞர் என்றன்
கண்ணார் என்குதென் உள்ளம்! — (அண்)

கா. அப்பாதுரையார்



பொதுச்செயலாளருடன் கழகப்பணிகளை விவாதிக்கிறார்.



அண்ணியுடன் பொதுப்பணிபுரிகிறார்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு